[illegible]

[illegible] 7 [illegible] 9

Sep 1984


RbT3 [illegible]11, M108

N34.7.9.

187099

Registered No. M. 2330.

# சித்தாந்தம்

மலர் எ | பவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 1934ஆம் செப்டம்பர் | இதழ் கூ

## சித்தாந்த மரபு

### முன்னுரை

சித்தாந்த மரபு என்னும் இவ் வசன நூல் திருவாவடுதுறை மடத்தைச்சார்ந்த ஆன்றோரொருவரால் சைவ சித்தாந்த உண்மைகளை எளிதில் விளக்கும் [illegible]த்தோடு எழுதப்பட்டது. திருவாவடுதுறை மடத்தில் இதனை மரபட்டவணை என்று வழங்குவர். சிவஞானமுனிவர் எழுதிய சித்தாந்தமரபு கண்டன கண்டனம் என்னும் நூல் சித்தாந்தமர பென்று சொல்லப்படும் மரபட்டவணையை மறுத்த நூலை மறுத்ததாகும். சிவஞானமுனிவர் இதனை ஆதரித்ததனாலேயே இந்நூல் திருவாவடுதுறை மடத்தில் போற்றப்பட்டுவந்த தென்பது தெளிவாகும். இது சித்தாந்த மரபட்டவணை யென்னும் பெயரோடு கோயிலூர் அ. இராமசாமிச் சுவாமியால் கி. பி. 1888-ல் வெளியிடப்பட்டது. திரி பதார்த்த சிந்தனை என்னும் பெயரால் திருநெல்வேலி பால் வண்ணமகவியாரால் கி. பி. 1898-ல் வெளியிடப்பட்ட சித்

கக் கையெழுத்து நூல் நிலையத்திலுள்ள திருவாவடுதுறை மரபட்டவணை யென்னும் நூற்பிரதியைப் பெயர்த்தெழுதி இப்பதிப்பு வெளியிடப்படுகின்றது. இங்குக் குறித்த நூல்களோடு இதனை ஒப்புநோக்குவோர் எண்கள் மாறியிருத்தலையும், முறை பிறழ்ந்திருத்தலையும், வாக்கியங்கள் விடுபட்டிருத்தலையும் தெரிந்து கொள்வர். விடுபட்டிருந்தாலும் அவசியஞ் சேர்க்கத் தக்கனவென்று காணப்பட்ட அவற்றிலுள்ள முக்கிய வாக்கியங்கள் இங்கே சேர்க்கப்பட்டுள்ளன.

## சித்தாந்த மரபு

*ஏக னனேக னிருள்கரும மாயையிரண்*
*டாகவிவை யாறநாதி யில்.* [**திருவருட்பயன்**, vi, 2]

ஏகனென்பது கர்த்தா; அனேகனென்பது ஆன்மா; இருளென்பது ஆணவ மலம்; கருமமென்பது புண்ணியபாவமாகிய கரும மலம்; மாயை யிரண்டென்பது சுத்தமாயையும் அசுத்த மாயையுமாம். இவை ஆறு பொருளும் ஒருகாலத்திலே யுள்ளனவல்ல, அநாதியிலே நித்தியமா யழியாதனவா யிருக்கும்.

### தன்னியல்பு

ஏகனாகிய கர்த்தாவுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்: ஒருவருமறிவியாமல் தானே யறிகிற குணமொன்று, ஆன்மாக்களுக்கு அறிவிக்கிற குணமொன்று ஆக உ. இதற்கு வசனம் சிவஞான சித்தியாரில் ௫-ல் [1]

*அறிதரு சிவனே தானு மறிந்தறி வித்து நிற்பன்*

என்றது காண்க.

அனேகனாகிய ஆன்மாவுக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்:



அறிவித்தா லறிகிற குணமொன்று, பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணமொன்று ஆக உ. இதற்குச் சிவஞானபோதம் ௮-ல் [4]

*அறிவித்தா லன்றி யறியா வுளங்கள்*

என்றும், சிவஞான சித்தியாரில் [v, 3]

*அறிந்திடு மறிவ னன்றும்*

என்றும் வருவது காண்க.

இருளாகிய ஆணவ மலத்துக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்: ஆன்மாக்களுக்கு வேண்டுங் காரியத்தை மறைக்கிற குணம் க, வேண்டாத காரியத்தில் விருப்பத்தைக் கொடுக்கிற குணம் க ஆக உ. இதற்கு வசனம் சிவப்பிரகாசம் 'அன்னியமா னவையுணர்த்தி' [ii, 18] என்று வருவது காண்க.

புண்ணிய பாவமாகிய கரும மலத்துக்கு எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்: ஆன்மாக்களானவை மலத்தைப் பொருந்தினால் மலமாய்ப் போகிறது க, சிவத்தைப் பொருந்தினாற் சிவமாய்ப் போகிற குணமொன்று க ஆக உ. இதற்கு வசனம் சிவப்பிரகாசம் 'மாயைமா மாயை' [vii, 2] என்றதிற் காண்க.

சுத்தமாயை அசுத்தமாயை இரண்டுக்கும் எண்ணிறந்த தன்னியல்புக் குணமுண்டு. அவற்றில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்: ஆன்மாக்கள் மலத்தைப் பொருந்தினால் மலமாய்ப் போகிற குணம் க, சிவத்தைப் பொருந்தினாற் சிவமாய்ப் போகிற குணம் க ஆக உ. இதற்கு வசனம் சிவப்பிரகாசம் 'மாயைமா மாயை' [vii, 2] என்றதிற் காண்க.

இவ்வாறு பொருளும் பதி பசு பாசமென மூன்றாக அடங்கும். அஃதெப்படியென்னில் ஏகன் பதி; அனேகன்

187099

பசு; ஆணவம் கன்மம் மாயையிரண்டு ஆக நாலும் பாசமென அறிக. (௧)

போதுவியல்பு

அனாதியிலே ஆன்மாக்கள் ஆணவமலத்தைப் பிடித்தார்கள், ஆணவமலம் ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது, இந்தச் செய்தியைக் கர்த்தாவானவர் அறிந்து இரக்கத்தினாலே ஆன்மாக்களுக்குக் கன்மத்துக் கேற்ற தனுவைக் கொடுத்து அந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பித்தார். இது அனாதியிலே பிரபஞ்சமுண்டாகிய முறைமை. இதற்கு வசனம் சிவப்பிரகாசம் 'எண்ணரிதாய்' [ii, 1] என்றதிற் காண்க. (௨)

ஆன்மாக்களுக்கு ஆணவ மலம் இயற்கையோ, செயற்கையோ? இயற்கையென்றாற் பாலுக்கு வெளுப்பும் கரிக்குக் கறுப்பும் ஒரு காலத்திலும் விட்டு நீங்காதது போல, ஆன்மாக்களுக்கும் ஆணவமலம் ஒரு காலத்திலும் விட்டு நீங்காது, ஆகையால் இயற்கையன்று. செயற்கையானால் வெள்ளைப் புடைவையில் அழுக்கேறுகிறது போல மோட்சத்திலும் வந்து பொருந்தவேணும், அப்படிப் பொருந்தாதபடியினாலே செயற்கையுமன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், நெல்லுக்குமியுஞ் செம்புக்குக் களிம்பும்போல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அனாதி செயற்கை, அனாதி சையோகமென்றுமாம். இதற்கு வசனம் சிவஞான போதத்தில் 'நெல்லுக் குமியும்' [ii, 7] என்றதிற் காண்க. (௩)

ஆன்மாக்களுக்கு ஆணவ மலம் கர்த்தா கூட்டுவைத்ததோ ஆணவ மலம் தானே வந்து பொருந்திற்றோ? கர்த்தா நின்மலராய்ச் சர்வானுக்கிரகரா யிருக்கிறபடியினாலே அவர் கூட்டினதன்று, ஆணவ மலஞ் சடமாகையினாலே தானே வந்து பொருந்த மாட்டாது. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில்,வேதாகமங்களிலே ஆன்மாவே ஆணவ மலத்தைப்



பிடித்தானென்று சொல்லியிருக்கிற படியினாலே ஆன்மாவே ஆணவ மலத்தைப் பிடித்தானென அறிக.

ஆன்மாவுக்குச் செய்தியுண்டோ இல்லையோ? ஆன்மா சுதந்தரவீனனானபடியினாலே சிவனுக்கே செய்தி யல்லாமல் ஆன்மாவுக்குச் செய்தியில்லை யென்றால், வேதாகமங்களிலே விதிவிலக்குச் சொல்ல வேண்டுவதுமில்லை, நரக தண்டனை யுண்டாக வேண்டுவதுமில்லை, விதிவிலக்கும் நரக தண்டனை யுண்டென்றுஞ் சொல்லியிருக்கிறபடியினாலே ஆன்மாவுக்குச் செய்தியுண்டு. இதற்கு வசனம் சிவஞான சித்தியாரில் 'அருளினா லுரைத்த' [ii, 33] என்பதிற் காண்க.

ஆன்மாவுக்குக் கன்மத்திலே உண்டாகிய விருப்பம் கர்த்தா கொடுத்த விருப்பமோ, ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமோ? கர்த்தா கொடுத்த விருப்பமென்றால் பாவத்தை ஏன் செய்தாயென்று நரகத்திலே போட்டுத் தண்டிக்க வேண்டுவதில்லை, அப்படித் தண்டிக்கையாற் கர்த்தா கொடுத்த விருப்பமன்று; ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமென்றால், ஆன்மா நல்வழியிருக்கத் தீயவழி நடவான், தீயவழி நடந்து நரக தண்டனைப் படுகையினாலே ஆன்மாவுக்குண்டாகிய விருப்பமன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், ஆணவ மலமே ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது. ஆணவ மல மயமாகிய சடத்துக்குச் செய்தி யுண்டோ வென்னில், விஷங் கள்ளுப் பாடாணம் காற்றுத் தீ நீர் முதலிய சடங்களுக்குச் செய்தியுண்டானாற்போல ஆணவ மலமாகிய சடத்துக்குஞ் செய்தியுண்டு. ஆகையாலே ஆணவ மலமே ஆன்மாவுக்குற்ற கன்மத்திலே விருப்பத்தைக்கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த ஆணவ மலமும் ஆன்மாவுக்குக் கன்மத்தை அறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பின ஆன்மாவுங் கன்மத்தை அறிந்தெடுத்துக்கொண்டு புசிக்கமாட்டான். விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை

அறிந்து வந்து பொருந்தமாட்டாது. இந்தச் செய்தியைக் கர்த்தாவானவர் அறிந்து இரக்கத்தினாலே ஆன்மாக்களுக்குக் கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அந்தந்தத் தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிப்பர். (கூ)

ஆணவ மலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்த தென்பதற்குக் குழந்தை பிணியாளர் முதலிய உவமைகள் வருமாறு :—

குழந்தைக்குப் பாலிலே உண்டாகிய விருப்பம் தாய் கொடுத்த விருப்பமோ, குழந்தைக்குண்டாகிய விருப்பமோ? தாய் கொடுத்த விருப்பமென்றால் அவள் கொடுத்த நேரமெல்லாம் பால் குடிக்கவேணும், அப்படிக் குடியாதபடியினாலே தாய் கொடுத்த விருப்பமன்று; குழந்தைக்குண்டாகிய விருப்பமென்றால் மாந்தம் பிடித்த வேளையிலும் பாலைக் குடிக்கவேணும், அப்படிக் குடியாதபடியினாலே குழந்தைக்குண்டாகிய விருப்பமு மன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், பசியே குழந்தைக்குப் பாலிலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த பசியும் குழந்தைக்குப் பாலை அறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது, விரும்பப்பட்ட பாலும் அறிந்து வந்து குழந்தை வாயிலே புகுத மாட்டாது. இந்தச் செய்தியைத் தாயானவள் அறிந்து இரக்கத்தினாலே பாலை யெடுத்துப் பாலாடையிலே விட்டுப் புகட்டுவள். குழந்தை க, பசி க, பால் க, தாய் க, பாலாடை க ஆக ரு. குழந்தையைப் போலும் ஆன்மா, பசியைப் போலும் ஆணவ மலம், பாலைப் போலும் கன்ம மலம், தாயைப் போலும் கர்த்தா, பாலாடையைப் போலும் தனு ஆக ரு. (எ)

பிணியாளனுக்கு மருந்திலே உண்டாகிய விருப்பம் பரிகாரி கொடுத்த விருப்பமோ பிணியாளனுக்குண்டாகிய விருப்பமோ? பரிகாரி கொடுத்த விருப்பமென்றால் அவன் மருந்து கொடுத்த நேரமெல்லாம் வாங்கிக் குடிக்கவேணும்,



அப்படிக் குடியாதபடியினாலே பரிகாரி கொடுத்த விருப்பமன்று; பிணியாளனுக்குண்டாகிய விருப்பமென்றால் எந்நேரமும் மருந்தைக் குடித்துக்கொண்டே யிருக்கவேணும், அப்படிக் குடித்துக்கொண் டிராதபடியினாலே பிணியாளனுக்குண்டாகிய விருப்பமுமன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், பிணியே பிணியாளனுக்கு மருந்திலே விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த பிணியும் மருந்தை அறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது, விரும்பின பிணியாளனும் அறிந்தெடுத்துக் குடிக்கமாட்டான், விரும்பப்பட்ட மருந்தும் அறிந்து வந்து வாயிலே புகுதமாட்டாது. இந்தச் செய்தியைப் பரிகாரி அறிந்து இரக்கத்தினாலே மருந்தை யெடுத்துப் பாத்திரத்திலே விட்டுப் பிணியாளனுக்குக் கொடுப்பன். பிணியாளன் க, பிணி க, மருந்து க, பரிகாரி க, பாத்திரம் க ஆக ரு. பிணியாளன் போலும் ஆன்மா, பிணியைப் போலும் ஆணவ மலம், மருந்தைப் போலுங் கன்ம மலம், பரிகாரியைப் போலுங் கர்த்தா, பாத்திரத்தைப் போலுந் தனு ஆக ரு. (அ)

குருடனுக்குக் கோலிலே யுண்டாகிய இச்சை கோல் கொடுத் திழுக்கிறவன் கொடுத்த இச்சையோ குருடனுக்குண்டாகிய இச்சையோ? கோல்கொடுத் திழுக்கிறவன் கொடுத்த இச்சையானால் அவன் கொடுத்த நேரமெல்லாங் கோலைப் பிடிக்கவேணும், அப்படிப் பிடியாதபடியினாலே கோல் கொடுத் திழுக்கிறவன் கொடுத்த இச்சையன்று ; குருடனுக்குண்டாகிய இச்சை யென்றால், எந்நேரமுங் கோலைப் பிடித்துக்கொண்டே யிருக்கவேணும், அப்படிப் பிடித்துக்கொண் டிராதபடியினாலே குருடனுக்குண்டாகிய இச்சையுமன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், குருடே குருடனுக்குக் கோலிலே இச்சையைக் கொடுத்தது. இச்சையைக் கொடுத்த குருடும் கோலை அறிந்தெடுத்துக் கொடுக்கமாட்

டாது, இச்சித்த குருடனுங் கோலை அறிந்தெடுத்துக் கொள்ள மாட்டான், இச்சிக்கப்பட்ட கோலும் அறிந்து கையிலே வந்து பொருந்தமாட்டாது. இந்தச் செய்தியை உரிமையுள்ள பேர் அறிந்து இரக்கத்தினாலே குருடன் இச்சித்த கோலை எடுத்துக்கொடுத்து அவன் நினைத்த இடத்திலே கொண்டுபோய் விடுவார்கள். குருடன் க, குருடு க, கோல் க, கோல்கொடுத் திழுக்கிறவன் க, அவனினைத்த விடம் க ஆக ரு. குருடனைப் போலும் ஆன்மா, குருட்டைப் போலும் ஆணவ மலம், கோலைப் போலுஞ் சரீரம், கோல் கொடுத் திழுக்கிறவனைப் போலுங் கர்த்தா, அவன் நினைத்த இடம் போலும் புவனங்கள் ஆக ரு. (கூ)

ஆன்மாவுக்குச் சரீரத்திலே உண்டாகிய இச்சை கர்த்தா கொடுத்த இச்சையோ, ஆன்மாவுக்குண்டான இச்சையோ? கர்த்தா கொடுத்த இச்சையானால், அவர் கொடுத்த நேரமெல்லாம் சரீரத்தைப் பற்றவேணும், அப்படிப் பற்றாதபடியினாலே கர்த்தா கொடுத்த இச்சையன்று; ஆன்மாவுக்குண்டாகிய இச்சை யென்றால் எந்நேரமுஞ் சரீரத்தைப் பற்றிக் கொண்டேயிருக்கவேணும், அப்படிப் பற்றிக்கொண் டிராதபடியினாலே ஆன்மாவுக்குண்டாகிய இச்சையுமன்று. இனிச் சித்தாந்தம் எப்படி யென்னில், ஆணவமலமே ஆன்மாவுக்குச் சரீரத்திலே இச்சையைக் கொடுத்தது. இச்சையைக் கொடுத்த ஆணவ மலமும் ஆன்மாக்களுக்குச் சரீரத்தை அறிந்தெடுத் துக் கொடுக்க மாட்டாது, இச்சித்த ஆன்மாவும் சரீரத்தை அறிந்தெடுத்துக்கொள்ளமாட்டான், இச்சிக்கப்பட்ட சரீரமும் ஆன்மாவை அறிந்து வந்து பொருந்தமாட்டாது. இந்தச் செய்தியைக் கர்த்தா அறிந்து இரக்கத்தினாலே ஆன்மாக்கள் இச்சித்த தனுவைக் கொடுத்து இச்சித்த புவனங்களிற் கொண்டுபோய் விட்டு இச்சித்த கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிப்பர். (க0)



குருடன் முதல்வனோ கோல் கொடுத் திழுக்கிறவன் முதல்வனோ? கோல்கொடுத் திழுக்கிறவன் முதல்வனானாற் குருடனுக்குக் குளத்தங்கரைக்குப் போக இச்சையிருக்கையிலே கோயிலுக்கு வாவென்றால் வாரான்; ஆகையாலே கோல் கொடுத் திழுக்கிறவன் முதல்வனன்று. கோல்கொடுத் திழுக்கிறவன் குருடனுக்குக் கோலைக் கொடுத்து, அவன் நினைத்த இடத்திலே கொண்டுபோய் விடுகையினாலே, குருடனே முதல்வன். (கக)

ஆன்மா முதல்வனோ கர்த்தா முதல்வனோ? கர்த்தா முதல்வனென்றால் ஆன்மாவுக்குக் கன்மத்திலே விருப்பமிருக்கையிலே மோட்சத்திலே வாவென் றழைத்தால் வாரான்; ஆகையாலே கர்த்தா முதல்வனன்று. கர்த்தா ஆன்மாவுக்கு இச்சித்த தனுவைக் கொடுத்து, இச்சித்த புவனங்களிலே கொண்டுபோய் விடுகையினாலே, ஆன்மாவே முதல்வன். (கஉ)

குயவன் பல பாண்டங்களை வனையுமிடத்துத் தன்னுடைய நினைவின்படி வனைவானோ, பிறருடைய நினைவின்படி வனைவானோ? தன்னுடைய நினைவின்படி வனைவானானால் சாலாகவே வனையவேணும், அல்லது சட்டியாகவே வனையவேணும்; அப்படி வனையாதபடியினாலே தன்னுடைய நினைவின்படி வனைவானல்லன், பிறருடைய நினைவின்மடி வனைவான். குயவன் க, மண் க, பாண்டம் க, பிறர் க ஆக ச. குயவனைப் போலுங் கர்த்தா, மண்ணைப் போலும் மாயை, பாண்டத்தைப் போலுஞ் சரீரம், பிறரைப் போலும் ஆன்மா ஆக ச. (க௩)

கர்த்தா ஆன்மாக்களுக்குத் தனுக்களைப் படைக்குமிடத்துத் தம்முடைய நினைவின்படி படைப்பாரோ, ஆன்மாக்கள் நினைவின்படி படைப்பாரோ? தம்முடைய நினைவின்படி படைப்பாரானால் நாயாகவே படைக்கவேணும், அல்லது

நரியாகவே படைக்கவேணும்; அப்படிப் படையாமல் பலவடிவாகப் படைக்கிறபடியினாலே, தம்முடைய நினைவின்படி படைப்பாரல்லர், ஆன்மாக்கள் நினைவின்படி படைப்பார். (கச)

வண்ணானவன் புடைவையிலுள்ள அழுக்கை உவர்சாணி கூட்டிப் போக்குகிறதுபோலக் கர்த்தா ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தை மாயாகருவிகளைக் கூட்டிப் போக்குவார். (கரு)

மலபரிபாகமாவது : பரி உபசர்க்கம் பாகம் திரிவு - பக்குவம் வந்த ஆன்மாவுக்கு மலசத்தியானது ஆன்மஞானத்தை மறையாதிருத்தல். (கசு)

சத்திநிபாதமாவது: சத்தி சிவசத்தி, திருவருள்; நி உபசர்க்கம், பாதம் விழுதல், பதிதலுமாம் - மலம் நீங்கின உயிரிலே திருவருள் விளங்கித் தோன்றுதல். (கஎ)

இருவினையொப்பாவது ஒரு தவசியானவன் விரும்பப்பட்ட பதார்த்தங்களையும் வெறுக்கப்பட்ட பதார்த்தங்களையும் கண்டால், விருப்பு வெறுப்பில்லாது அப்பதார்த்தங்களைக் கண்டாற்போலப் பக்குவான்மாவானவன் நல்வினைப் பலனுந் தீவினைப் பலனும் வந்தால் இந்த இரண்டினிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி நிற்றல். உலகத்தில் விரும்பப்பட்ட பதார்த்தங்களாவன: பொன் வெள்ளி பெண் பால் பழம் சுகந்தம் வஸ்திரம் முதலாயின. வெறுக்கப்பட்ட பதார்த்தங்களாவன : புலி கரடி பாம்பு தரித்திரம் சயவியாதி முதலாயின. விருப்பு வெறுப்பில்லாத பதார்த்தங்களாவன: திரணம் பதர் முதலாயின. (கஅ)

ஒருவன் ஒரு வைப்பாட்டிக்கு வீடும் புசிப்பும் வேண்டினவெல்லாமுங் கொடுத்து அவள் வீட்டிற் பதினைந்து நாளும், குடியிலுள்ள இல்லாளுக்கு வீடும் புசிப்பும் வேண்டின வெல்லாமுங் கொடுத்து அவள் வீட்டிற் பதினைந்து



நாளும் வாழ்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கையில் இல்லற நூல் கேட்டுக் கற்புடைய மனைவியுடனே கூடி இல்வாழ்க்கை செய்வதே முக்கியமென்றறிந்து வைப்பாட்டியை விட்டு நீங்கிக் குடியிலுள்ள இல்லாளுடனே கூடி இல்லறஞ் செய்துகொண் டிருக்கையிலே துறவற நூல் கேட்டுத் துறவறமே முக்கியமென்றறிந்து குடியிலுள்ள இல்லாளையுந் தீங்கென்று கண்டு வைப்பாட்டியைப்போல விட்டு நீங்கிப் பின்பு அந்த இரண்டு பேரிடத்திலும் விருப்பு வெறுப்பில்லாதது போல, ஒருவன் பாவமும் புண்ணியமுஞ் செய்து வருகையிலே அறநூல் கேட்டுப் பாவந் தீங்கென்று விட்டு நீங்கிப் புண்ணியமே முக்கியமென்று செய்துகொண்டு வருகையில் ஞானசாத்திரத்தைக் கேட்டுப் புண்ணியமுஞ் செனனமரணத்தைக் கொடுக்கையினாலே புண்ணியத்தையும் பாவத்தைப்போலத் தீங்கென்று கண்டு நீங்கிப் பின்பு இந்த இரண்டினிடத்திலும் விருப்பு வெறுப்பின்றி நிற்றல் இருவினையொப்பு. (ககூ)

சிவன் தானே ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனி கொண்டு வருவாரென்பதற்குப் பல குற்றமுண்டு. அவையாவன :

ஒரு ஆசாரியரான ஆன்மாவானது பிதாவினுடைய உதரத்திலே இரண்டு மாதமிருந்து சையோகஞ் செய்கிற காலத்திலே மாதாவினுடைய யோனி வழியே புகுந்து கருப்பாசயத்திற் பத்து மாதந் தங்கிப் பின்பு பிறந்து மலமூத்திராதிகளையளைந்து கிடந்து வளர்ந்து பின்பு ஒரு வாத்தியாரை யடைந்து தண்டனைப் பட்டு அட்சராப்பியாசம் பண்ணிப் பின்பு ஒரு வித்துவானிடத்திற் போய் ஏவல்செய்து வித்தை யப்பியசித்து ஆசாரியரை யடைந்து பணிவிடை பண்ணிச் சமய தீட்சை முதலாகிய தீட்சையும் பெற்று அபிடேகம் பண்ணிக்

கொண்டு இன்னார் மகன் இன்னாரென்றறிந்து சயங் குட்ட முதலாயின வியாதியுமடைந்து மரண முதலாயின தன்றியும் சங்கற்ப நிராகரணத்தில் 'மாயா ஒருவன் மாயா வுருவினை, யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே' [சைவ வாதி சங்கற்ப நிராகரணம், 26, 27] என்றும், போற்றிப் பஃறொடையில் 'பிறவா முதல்வன் பிறந்' [138] தென்றும், சிவஞான சித்தியாரில் 'மன்னுமருட் குருவாகி வந்' [viii, 1] தென்றும் இருக்கிற வசனங்களுக் கெல்லாம் விரோதமுண்டென்னிற் கூடாது. கர்த்தா ஆசாரிய மூர்த்தமாய்த் திருமேனிகொண்டு வருதலாவது மலம் நீங்கின உயிரிலே சிவஞானம் விளங்கித் தோன்றுத லாகையினாலே குற்றமில்லையென அறிக. (உ௦)

சீடனுக்கு ஆசாரியர் சந்நிதானத்திலே வருமுன்னமே மலம் நீங்குமோ வந்த பின் மலம் நீங்குமோ? வந்தபின் மலம் நீங்குமென்றால் வந்த பேருக்கெல்லாம் மலம் நீங்கவேணும். அப்படி நீங்காதபடியினாலே வந்தபின்பு மலம் நீங்கினதன்று, வருமுன்னே மலம் நீங்கினதென்றால் ஆசாரியர் வேண்டுவ தில்லையென்னில் அது கூடாது, படலம் நீங்கின கண்ணுக்கே ஆதித்தன் காட்டுகிறதுபோல ஆணவ மலம் நீங்கின பக்குவான்மாவுக்கே சிவன் அறிவிப்பார். ஆகையாலே ஆசாரியர் சன்னிதானத்தில் வருமுன்னமே மலம் நீங்கினதாம். (உக)

சுருதி குருவாக்குச் சுவானுபவம் மூன்றினுள் முதன்மை யாதென்னில் சுருதியுங் குருவாக்குஞ் சுவானுபவத்துக்குக் காரணமாகையாற் சுவானுபவமே முதன்மை. (உஉ)

ஆன்மா நித்யனாயிருக்கப் பிறந்தான் இறந்தானென்று வேதாகமங்கள் சொல்லுகின்றனவே அஃதேதென்னில் ஆன்மா மாயாகருவியைப்பற்றி ஆன்மபோதஞ் சீவித்தலே பிறப்பு, ஆன்மபோதம் மாயாகருவியைப்பற்றிச் சீவியாதிருத்தலே இறப்பு. (உ௩)



பஞ்சகிருத்தியம் நித்தியமோ அநித்தியமோ? சிவஞான சித்தியார் ௬-ல் 'உயிர்கட்கெல்லாம், விரிந்திடு மறிவுங் காட்டி வீட்டையு மளிப்பன் மேலோன்' [8] என்றிருப்பதால் பஞ்சகிருத்தியம் அநித்தியம். ௯-ல் 'என்றுங், தணவாத கருமமொன்றுந் தருவது மில்லை' [4] யென்று பஞ்சகிருத்தியம் நித்தியமென்று திருவுளம் பற்றினது நித்தியம் பலவாகையால் அவற்றுள் ஒன்றி லடங்கும். (உ௪)

பஞ்சகிருத்தியம் ஆன்மாவுக்கோ சரீரத்துக்கோ? ஆன்மாவுக்கென்றால் ஆன்மா நித்தியனானபடியினாலே சிருட்டி திதி சங்காரங் கூடாது, சரீரத்துக்கென்றால் திரோபவம் அனுக்கிரகங் கூடாது. இனிச் சித்தாந்தம் எப்படியென்னில், 'அழிப்பிளைப் பாற்ற லாக்க' [சிவஞானசித்தியார், i, 37] மென்கிற வசனத்தினாலே சிருட்டி திதி சங்காரஞ் சரீரத்துக்குண்டாயிருந்தாலும் அவை மூன்றினாலே யுண்டாகிய சுகதுக்கமும், திரோபவானுக்கிரகமும் ஆன்மாவுக்கே உண்டாகையினாலே ஆன்மாவைக் குறித்தே பஞ்சகிருத்தியமென வறிக.

ஆன்மா ஞான சொரூபனாய் நித்தியனாயிருக்க அவனுக்குச் சிருட்டியாதி ஏதென்னில், அறியுந் தொழில் உண்டாதலே சிருட்டி, அறியுந் தொழில் நிற்றலே திதி, அறியுந் தொழில் நீங்கலே சங்காரம், அறியுமிடத்து ஒவ்வொன்றை மறைத்தலே திரோபவம், மோட்சோபாயஞ் சிந்தித்தலே அனுக்கிரகம். (உ௬)

ஒளியும் இருளும் ஓரிடத்திலே கூடியிராததுபோல ஆன்மாவினிடத்திலே கர்த்தாவும் ஆணவ மலமும் ஓரிடத்திலே கூடியிருப்பதில்லையே நீர் கூடியிருக்குமென்றது எப்படியென்னில், ஒரு மரம் ஈரத்தோடுங் கூடியிருக்க அதில் அடிமுதல் நுனிவரையும் அக்கினி வியாபித்திருத்தல் போலும். (உ௭)

ஆன்மா நரகத்திலே கிடந்து அனுபவிக்குமிடத்து அந்த ஆன்மாவை விட்டு நீங்காத சிவனுக்குந் துன்பமுண்டென்

னிற் கூடாது. அஃதெப்படியென்னில், ஆதித்தியப்பிரகாசம் படிகவொளியிலே கலந்துநின்று வன்னங்களைப் பற்றுவித்துத் தான் பற்றுதவாறுபோலும், கண்ணொளியிற் கலந்துநின்று விஷயங்களைக் காண்பித்துத் தான் காணுதவாறுபோலும், ஒருவன் வயிற்றிலே கிடக்கிற புழு அனுபவிக்குந் துன்பம் அவனுக் கில்லாதவாறுபோலுமென வறிக. (உஅ)

ஆன்மா கிஞ்சிஞ்ஞனே சுதந்தரவீனனே? கேவலங் கிஞ்சிஞ்ஞனென்றால் மின்மினிப் பூச்சிக்குள்ளே பிரகாசம் போலக் கொஞ்சமானாலுஞ் சுயமாக அறிவு விளங்கவேணும், அப்படி விளங்காதபடியினாலே கேவலங் கிஞ்சிஞ்ஞனுமன்று; கேவலஞ் சுதந்திர வீனனென்றாற் சிவன் அறிவித்ததெல்லாம் அறியவேணும், அப்படி அறியாதபடியினாலே கேவலஞ் சுதந்தரவீனனுமன்று. இனிச் சித்தாந்தம் எப்படியென்னில், ஆன்மா கிஞ்சிஞ்ஞனாகிய சுதந்தரவீனன். (உகூ)

ஆன்மா மோட்சத்தை யடையுமிடத்துக் கெட்டுக் கூடுமோ கெடாது கூடுமோ? கெட்டாற் கூடத்தக்கதில்லை, கெடாதிருந்தாற் கூடமாட்டாது. இனிச் சித்தாந்தம் எப்படியென்னில், ஆன்மா கெடாமல் விடயங்களிலே செல்லுகிற ஆன்மபோக நிகழ்ச்சி கெட்டுக் கூடுமென அறிக. கெடுதலாவது போதஞ் சீவியாதிருத்தல். (௩0)

வியாபகம் வியாத்தி வியாப்பியம் ஆக ௩. வியாபகமாவது நிறைந்திருத்தல், வியாத்தி ஒன்றிலொன்று கலந்திருத்தல், வியாப்பியம் ஒன்றில் ஒன்று அடங்கியிருத்தல். அஃதெப்படியென்னில், சமுத்திரம் வியாபகம், தண்ணீரும் உப்புங் கலந்திருத்தல் வியாத்தி, சமுத்திர வியாபகத்தில் தண்ணீரும் உப்பும் அடங்கியிருத்தல் வியாப்பியம். சிவனுடைய வியாபகஞ் சமுத்திர வியாபகம்போலும், ஆன்மாவும் மலமும் வியாத்தியா யிருத்தல் சமுத்திர வியாபகத்தில் தண்ணீரும் உப்புங் கலந்திருத்தல் போலும், சிவனுடைய வியாபகத்திலே ஆன்மாவும் மலமும் வியாப்பியமாயிருத்தல் சமுத்திர வியாபகத்தில் தண்ணீரும் உப்பும் அடங்கி யிருக்தல்போலும். சிவனுடைய வியாபகத்தில் சிவசத்தி வியாப்பியம், சிவசத்தியிலே ஆன்மாவும் மலமும் வியாப்பியம், ஆன்மாவிலே ஆன்மசத்தி வியாப்பியம், மலத்திலே மலசத்தி வியாப்பியம், ஆன்மபோதத்திலே மாயை வியாப்பியம், மாயையிலே மாயாகாரியம் வியாப்பியம், மாயாகாரியத்திலே கன்மம் வியாப்பியம், கன்மத்திலே கன்மகாரியம் வியாப்பியமென அறிக. (௩க)



ஆன்ம வியாபகத்துக்குக் கண் முதலிய உவமைகள் வருமாறு: கண் க, கண்ணொளி க, கண்ணொளிக்குக் காணும் குணம் க, கண்ணொளிக்குக் காணுந் தொழில் க, இருள் க, பதார்த்தம் க, விளக்கு க, விளக்கை யுண்டாக்குகிறவன் க ஆக அ.

கண்ணைப்போல ஆன்மா, கண்ணொளியைப் போல ஆன்மஞானம், கண்ணொளிக்குக் காணுங் குணத்தைப் போல ஆன்ம ஞானத்துக்கு அறியுங் குணம், கண்ணொளிக்குக் காணுந் தொழிலைப் போல ஆன்ம ஞானத்துக்கு அறியுந் தொழில், இருளைப் போலும் ஆணவமலம், பதார்த்தங்களைப் போலுஞ் சுகதுக்கம், விளக்கைப் போலும் மாயாகருவி, விளக்கை யுண்டாக்குகிறவனைப் போலுஞ் சிவன். கண்ணுக்கு விளக்கு நீங்கினவிடத்து எத்தனை பதார்த்தம் போயின எத்தனை பதார்த்த முள்ளனவென்றால் கண்ணொளிக்குக் காணுந் தொழிலும் விளக்கும் போக்கி நின்ற ஆறு பதார்த்தமு முள்ளன. (௩உ)

ஆன்மா வியாபகமாக இருந்து சரீரத்தைப் பற்றுகிறதற்குப் படிகமலை அக்கினிமலை யுவமைகள் வருமாறு:

படிகமலை க, படிகமலைக்கு ஒளி க, ஒளிக்குப் பற்றுங் குணம் க, ஒளிக்குப் பற்றுந் தொழில் க, வன்னம் க, வன்னத்தைப் பற்றுவிக்கிறவன் க ஆக கூ. படிகமலையைப்

போலும் ஆன்மா, படிகமலைக்கு ஒளியைப்போலும் ஆன்ம ஞானம், படிக ஒளிக்குப் பற்றுங் குணத்தைப்போல ஆன்ம ஞானத்துக்கு அறியுங் குணம், படிக ஒளிக்குப் பற்றுந் தொழிலைப்போல ஆன்மஞானத்துக்கு அறியுந் தொழில், வன்னத்தைப் போலும் மாயாகருவி, வன்னத்தைப் பற்றுவிக்கிறவனைப் போலுங் கர்த்தா. படிகமலை எந்தப் பக்கத்திலே வன்னத்தைக் கொடுத்தாலும் அந்தப் பக்கத்திலே வன்னத்தைப் பற்றிக்கொள்ளும். அதுபோல எல்லாப் புவனங்களிலேயும் வியாபித்திருக்கிற ஆன்மாவும் கர்த்தா எந்தப் புவனத்தில் மாயா கருவியைக் கொடுத்தார் அந்தப் புவனத்திலே கருவியைப் பற்றிக்கொண்டறியும். (௫௩)

அக்கினிமலை ௧, மலைக்குச் சூடு ௧, சூட்டுக்குச் சுடுங் குணம் ௧, சூட்டுக்குச் சுடுந்தொழில் ௧, பஞ்சு ௧, பஞ்சைப் பற்றுவிக்கிறவன் ௧ ஆக ௬. அக்கினிமலையைப் போலும் ஆன்மா, அக்கினி மலைக்குச் சூட்டைப் போலும் ஆன்ம ஞானம், சூட்டுக்குச் சுடுங்குணத்தைப் போல ஆன்மஞானத்துக்கு அறியுங் குணம், சூட்டுக்குச் சுடுந்தொழிலைப் போல ஆன்ம ஞானத்துக்கு அறியுந் தொழில், பஞ்சைப்போலும் மாயா கருவி, பஞ்சைப் பற்றுவிக்கிறவனைப்போலுங் கர்த்தா. அக்கினி மலை எந்தப் பக்கத்திலே பஞ்சைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்ளும். அப்படிப்போல எல்லாப் புவனத்திலும் வியாபித்திருக்கிற ஆன்மாவும் எந்தப் புவனத்திலே கர்த்தா மாயாகருவி கொடுத்தாலும் பற்றிக்கொண்டறியும். (௫௪)

ஆன்மா சார்ந்ததன் வண்ணமா யிருக்குமென்பதற்கு ஆகாய உவமை வருமாறு :

ஆகாயமானது இருளுடனே கூடினால் இருளாயிருக்கும்; ஒளியுடனே கூடினால் ஒளியாயிருக்கும். அதுபோல ஆன்மா மலத்துடனே கூடினால் மலமா யிருக்கும், சிவத்துடனே



கூடினாற் சிவமாயிருக்கும். இதற்குப் படிகமலை அக்கினிமலை உவமைகளுமாம். (௫௫)

எண்ணிறந்த கோடி புவனங்களிலே யிருக்கிற எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கும் அறிவுந் தொழிலும் கொடுக்கிறதினாலே சிவன் வியாபகனென அறிக. (௫௬)

எண்ணிறந்தகோடி ஆன்மாக்களுக்கும் அறியாமை யிருக்கையினாலே ஆணவ மலம் வியாபகமாமென அறிக. (௫௭)

எண்ணிறந்த கோடி புவனங்களிலிருக்கிற எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்குந் தனுகாரணாதி யிருக்கையினாலே மாயை வியாபகமென அறிக. (௫௮)

எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த கோடி புவனத்திலே புசிப்பிருக்கையினாலே கன்மம் வியாபகமென அறிக. (௫௯)

எண்ணிறந்த கோடி கண்ணுக்கும் சிவன் ஒருவராக இருந்து அறிவிக்கிறதெப்படியென்னில், எண்ணிறந்த கோடி கண்ணுக்கும் ஆதித்தன் ஒருவனாக இருந்து காட்டுகிறது போலவென அறிக. (௬௦)

எண்ணிறந்த கோடி ஆன்மாக்களையும் ஆணவ மலம் ஒன்றாயிருந்து மறைக்கிறது எப்படியென்னில், எண்ணிறந்த கோடி கண்களையும் இருள் ஒன்றாயிருந்து மறைக்கிறது போலுமென அறிக. (௬௧)

எண்ணிறந்த கோடி புவனங்களிலிருக்கிற எண்ணிறந்த கோடி ஆன்மாக்களுக்கும் எண்ணிறந்த கோடி கன்மங்களைச் சிவன் ஒருவராக இருந்து அறிந்து கூட்டி முடிக்கிறது எப்படி யென்னில், ஒரு வண்ணானவன் ஓர் ஊரிலே யிருக்கிற பலபேருடைய பல புடைவைகளை வாங்கி வெளுத்து இது இன்னாரது இது இன்னாரது என்றறிந்து எடுத்துக் கொடுத்தல் போலும்; ஓர் இடையன் ஓர் ஊரிலிருக்கிற பல பேருடைய பல மாட்டையும் பல ஆட்டையும் இது இன்னாரது இது

இன்னாது என்றறிந்து அவரவர் வீடுகளில் கொண்டுபோய் விடுதல் போலுமென அறிக. (௪௨)

ஆன்மாக்களுக்கு வினை வேறே, கன்மம் வேறே. அவற்றுள் வினையாவது ஆன்மாக்களுக்குக் கேவலத்தி லுண்டாகிய விருப்பம். இதற்கு வசனம் தேவாரம் 'அல்ல லென்செயும் அருவினை யென்செயும்' [அப்பர்: கோயில், திருக்குறுந்தொகை, ii, 4] என்பதிற் காண்க. கன்மமாவது புண்ணிய பாவங்கள்.

கன்மமாவது ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென மூன்று விதமாயிருக்கும். இவற்றிற்கு முறையே தூல கன்மமென்றும் சூக்கும கன்மமென்றும் அதிசூக்கும கன்மமென்றும் பெயர். அவற்றுள் ஆகாமியமாவது பிராரத்தம் புசிக்கையிலே உண்டாகிய இதமும் அகிதமும். இதமகிதமாவது மன வாக்குக் காயங்களினாலே செய்யப்பட்ட நல்ல தொழிலுந் தீய தொழிலுமாம். சஞ்சிதமாவது மாயையினாலே கட்டுக்கிடையாகிய புண்ணிய பாவங்கள். பிராரத்தமாவது எடுத்த தேகத்திலே புசித்துத் தொலைவனவாகிய சுக துக்கங்களாம். இந்தச் சுக துக்கங்களுக்கு இருப்பிடமாவது சத்தப் பரிச ரூப ரச கந்தங்களாகிய விடயங்கள். இந்த ஐந்து விடயங்களும் பத்து விதமாயிருக்கும். அஃதெப்படி யென்னில், விருப்புச் சத்தம் வெறுப்புச் சத்தம் விருப்புப் பரிசம் வெறுப்புப் பரிசம் விருப்பு ரூபம் வெறுப்பு ரூபம் விருப்பு ரசம் வெறுப்பு ரசம் விருப்புக் கந்தம் வெறுப்புக் கந்தம் இந்த முறைமையிற் பத்து மிருக்கும். இந்தப் பத்தும் சுக துக்கங்களுக்கு ஏதுவா யிருக்குமென அறிக. (௪௩)

ஆன்மாவினுடைய விடய கன்மத்தைச் சிவனும் அறிவர்; ஆன்மாவும் அறிவான். ஆக இரண்டுஞ் சரியோவென்றால் சிவனறிகிறது மாத்திரம், ஆன்மா அறிந்து அழுந்துவான். (௪௪)



ஆன்மா பிராரத்தம் புசித்தற்குச் சிவன் நல்வினை தீவினை யிரண்டையுங் கருவியாகக் கூட்டினார். அந்தச் செய்தியை ஆன்மா தன்னுடைய செய்தி யென்று நினைத்துக் கொண்டான். ஆகையினாலே இந்த இரண்டு தொழிலும் ஆன்மாவுக்கு ஆகாமியமாயின. (௪௫)

ஆணவ மலமானது இராக்காலம் போலும்; கேவலமானது இருட்டைப் போலும். கேவலத்துக்குப் பொருள் மறைப்பு. (௪௬)

ஆன்மாவுக்கு ஆர்ச்சிப்புக் கேவலாவத்தையிலே யல்லாமற் சகலாவத்தையிலே கூடாது. சகலாவத்தையிலே ஆன்மாவுக்கு ஆர்ச்சிப் பென்றால் சிவனுக்குத் தோஷம் வரும். ஆகையினாலே சகலாவத்தையிலே ஆன்மாவுக்கு ஆர்ச்சிப்பு இல்லையென அறிக. (௪௭)

ஆன்மாவுக்குக் கேவல சகல சுத்தமென மூன்றவத்தையுண்டு. அவற்றுட் கேவலமாவது காரண கேவலமென்றுங் காரிய கேவலமென்றும் இரண்டு. அவற்றுட் காரண கேவலமாவது அனாதியிலே ஆன்மா அறிவு கெடாமல் ஆணவ மலத்திலே யழுந்திக் கிடத்தல். அஃதெப்படி யென்னில், கண்ணானது இராக் காலத்து இருட்டில் ஒளி கெடாமல் விழித்திருத்தல் போலும். காரிய கேவலமாவது நித்தியங் கருவி நீங்கி நித்திரை கொள்ளுதல்.

காரண சகலமாவது அனாதி கேவலத்திலே அழுந்திக் கிடந்த ஆன்மா மாயாகருவிகளினாலே கேவலம் நீங்கிச் சுக துக்கங்களை அறிதல். அஃதெப்படியென்னில், இராக்காலத்து இருளிலே அழுந்திக் கிடந்த கண்ணானது விளக்கினாலே இருள் நீங்கிப் பதார்த்தங்களைக் காண்கிறது போலும். காரிய சகலமாவது நித்தியங் கேவலப்பட்ட ஆன்மா மாயா

கருவிகளினாலே மறைப்பு நீங்கிச் சத்தாதி விடயங்களை யறிதல்.

காரண சுத்தமாவது ஆன்மா பஞ்ச மலங்களையும் நீங்கி அருளைப் பொருந்திச் சிவானந்தத்தை அநுபவித்தல். அஃதெப்படியென்னில், இராக்காலத்து இருளிலே விளக்கோடுங் கூடியிருந்த கண்ணானது சூரியன் உதயமானவிடத்து இராக்காலமும் இருட்டும் விளக்கும் நீங்கிச் சூரிய கிரணத்தினாற் சூரியனைக் கண்டுகொண் டிருத்தல் போலும். காரிய சுத்தமாவது சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மல சாக்கிரம் நின்மல சொப்பனம் நின்மல சுழுத்தி நின்மல துரியம் நின்மல துரியாதீதம் ஆகப் பஞ்ச அவத்தையுமாம். (சஅ)

மல நிவிர்த்திக்குக் காரணங்களாவன அநாதி சிருஷ்டி தொடுத்து மோட்ச பரியந்தம் உண்டான சிவபுண்ணியங்களாம்.

சிவ புண்ணியங்களாவன : புத்தி பூர்வ சிவபுண்ணியம், அபுத்தி பூர்வ சிவபுண்ணியம் - உ ; உபாய சரியை, உபாய கிரியை, உபாய யோகம், உபாய ஞானம் - ச ; உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம்-ச ஆக கO. இப்பத்தில் உண்மை ஞான மொன்றும் அருள்நிலை, மற்றை யொன்பதும் மருள்நிலை.

உண்மை ஞான மென்னுஞ் சிவபுண்ணிய மொன்றும் பத்துவிதமா யிருக்கும். அவை : தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம் ஆக கO. இந்தப் பத்தையும் சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலசாக்கிரமாதி யதீதமாகிய பஞ்ச அவத்தையிலே அடக்குகிற தெப்படி யென்னில், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம் இந்த நாலும் நின்மல சாக்கிரத்திலே யடங்கும் ; ஆன்ம தரிசனமும், சிவ ரூபமும் நின்மல சொப்பனத்தி லடங்கும் ; நின்மல சுழுத்தியிலே அடங்குவது ஒன்றுமில்லை, அருள்செய்யும் பஞ்சகிருத்தியத்தை யான் செய்வேனென்று போதஞ் சீவித்தல் மாத்திரம்; நின்மல துரியத்திலே ஆன்ம சுத்தியும் சிவ தரிசனமும் சிவ யோகமும் அடங்கும் ; நின்மல துரியாதீதத்திலே சிவ போகம் ஒன்றும் அடங்குமெனக் கொள்க.



தத்துவ ரூபமாவது முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலை யறிதல். தத்துவ தரிசனமாவது முப்பத்தாறு தத்துவங்களையும் சடமென்றறிதல். தத்துவ சுத்தியாவது முப்பத்தாறு தத்துவங்களையுஞ் சிவஞானத்தினாலே தனக்கு அன்னியமென் றறிந்து நீங்குதல். ஆன்ம ரூபமாவது பஞ்ச மலங்களையும் நீங்கி ஆன்மாவைப் பிரமமென்று கருதுதல். ஆன்ம தரிசனமாவது தனக்கொரு செய்தியுமில்லை என்றறிந்து நிற்றல். ஆன்ம சுத்தியாவது ஆன்மா சிவஞானத்திலே போயழுந்தித் தான் தோன்றாமல் அந்தச் சிவஞானமாய்ப் போதல். சிவ ரூபமாவது ஆணவ மலத்திலே கிடக்கிற ஆன்மாவைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களை நீக்கி மோட்சத்திலே விடுவரெனத் திடமாயறிதல். சிவ தரிசனமாவது சிவன் செய்யும் பஞ்சகிருத்தியத்தை ஆன்மா செய்யமாட்டானென் றறிந்து திருவருளோடு அழுந்தாது சேர்தல். சிவ யோகமாவது சிவசத்தி செய்யுங் கிருத்தியமெல்லாமுஞ் சிவனுக்குச் சற்றுமில்லை யென்றறிந்து சிவசத்தியின்றித் தனக்கும் பிறர்க்குஞ் சற்றுஞ் செய்தியில்லை யென்றறிந்து தெரிந்து திருவருளோடு அழுந்தி அதுவாய்ப் போதல். சிவ போகமாவது ஆன்மா சிவானந்தத்தைப் புசித்தல். (ருO)

சிவஞானபோதத்தில் இரண்டாஞ் சூத்திரத்தில் தத்துவ ரூபமொன்றுஞ் சொல்லப்பட்டது. ஐந்தில் தத்துவதரிசனமும், ஆறில் தத்துவ சுத்தியும், ஏழில் ஆன்ம ரூபமும்,

எட்டில் ஆன்ம தரிசனமுஞ் சிவ ரூபமும், ஒன்பதில் பத்தில் ஆன்ம சுத்தியுஞ் சிவ தரிசனமுஞ் சிவ யோகமும், பதினொன்றில் சிவ போகமுஞ் சொல்லியிருக்கிறது. (௫௧)

சிவஞானபோதம் முதற் சூத்திரத்தில் சங்கார கர்த்தாவே முதன்மையான கர்த்தாவென்று சொன்னது. இரண்டிலே மலமும் கன்மமும் மாயையும் ஆன்மாவும் சிவனும் ஆகிய ஐந்து பொருளும் அத்துவிதமா யிருக்குமென்றது. மூன்றில் அநுமானத்தினாலே ஆன்மா உண்டென்று சாதித்தது. நான்கில் ஆன்மாவுக் கனாதியிலே கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தையு முண்டென்று சொன்னது. ஐந்தில் ஆன்மா தன்னைப் பிரமமென்று கருதல் அல்லவென்று மறுத்தது. ஆறில் சத்து மசத்தும் பகுத்துச் சொன்னது. ஏழில் ஆன்ம இலக்கணமும் முன்சொன்ன சத்தசத்திற்குப் புறனடையுஞ் சொன்னது. எட்டில் சிவஞானத்தை யறியும் முறைமையைச் சொன்னது. ஒன்பதில் ஆன்ம சுத்தி சொன்னது. பத்தில் பாச க்ஷயஞ் சொன்னது. பதினொன்றில் பரமேசுரன்சீபாதங்களை யணையும் முறைமையைச் சொன்னது. பன்னிரண்டில் மனோவாக்குக் காயங்களினாலே அறியப்படாத சிவனை மனோவாக்குக் காயங்களினாலே யறிந்து வழிபடும் முறைமையைச் சொன்னது. (௫௨)

ஞானவான்களுக்குப் பிராரத்தமில்லை யென்பதற்குப் பழைய மணியகாரன் முதலிய உவமைகள் வருமாறு:

ஒருவன் ஓர் ஊரிலே வெகு நாள் மணியம் பண்ணிக் கொண்டிருந்து வெகு தானிய தவசங்களும் வாழை கரும்பு முதலானவெல்லாம் உண்டாக்கிக் கொண்டிருக்கையிலே மணியம் மாறிப் புதுமணியகாரன் வந்தவிடத்துப் பழைய மணியகாரனாலே அதில் ஒரு பதார்த்தமும் எடுக்கப்படாது. பழைய மணியகாரன் ௧, ஊர் ௧, பதார்த்தம் ௧, புதுமணியகாரன் ௧ ஆக ௪. பழைய மணியகாரனைப் போலும் ஆன்மா, ஊரைப் போலும் சரீரம், பதார்த்தங்களைப் போலும் பிராரத்தம், புது மணியகாரனைப் போலுஞ் சிவன் ஆக ௪. (௫௩)

ஞானவானான ஆன்மாவுக்குப் புசிப்பாவது சிவஞானத்தை அநுபவித்தல்; சிவனுக்குப் புசிப்பாவது ஞானவான்களுடைய பிராரத்தம். (௫௪)

கருமபரிபாகி நடையாவது வேதாகமங்களை ஓதி அறுதியிட் டறிந்து சரீரப்பற்று விடாமல் நித்தியகர்மானுட்டானங்களை வழுவாமற் செய்து முடித்தல். (௫௫)

மலபரிபாகி நடையாவது சரீரத்திலே பற்றில்லாமல் ஞானசாத்திரங்களை யோதிக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலைப் பொருந்தி நிட்டை கூடுதல். (௫௬)

ஞானவான்களுக்குத் தேகம் விழுதலாவது தத்துவ சுத்திப்படுதல்.

ஞானவான்களுக்கு அந்தியேஷ்டியாவது நின்மல சாக்கிர முதல் துரிய மீறாக உள்ள நாலவத்தையும் நீங்கிச் சிவானந்தத்திலே அழுந்துதல். (௫௭)

பரமேசுரன் அநாதிகேவலத்திலே கிடந்த ஆன்மாவுக்கு அநாதிசிருட்டி செய்கிற காலத்தில் தானே தலமாகவுந் தீர்த்தமாகவும் மூர்த்தியாகவுந் திருமேனி கொண்டெழுந்தருளி அனேகம் பிரகாரமாக உபகரித்துச் சிவபுண்ணியங்களைக் கொடுப்பர்: சிவதலங்களிலே புழு முதலான சரீரங்கள் சனித்தாலும் நசித்தாலுஞ் சிவபுண்ணிய முண்டாம்; நாற்கால் மிருகங்கள் மனிதர் முதலானவர்கள் தீர்த்தத்தைக் குடித்தாலும் முழுகினாலுந் திவலைகள் தெறித்தாலும் நெற்பயிர் முதலானவைகள் தீர்த்தம் பாய்ந்து விளைந்து அவற்றைப் பறவை முதலாயின புசித்தாலுஞ் சிவபுண்ணிய முண்டாம்; சிவாலயமிருக்கிற ஊரிலும் புண்ணியமுண்டாம். சிவலிங்கத்திலே செய்யும் அர்ச்சனை அபிடேக நைவேத்தியம்

முதலானவைகளுக் குரியவான விருட்சங்களாகவும் நெல் முதலாயின பயிர்களாகவும் பசுமுதலாயின மிருகங்களாகவும் சனிப்பித்துச் சிவபுண்ணியங்களை உண்டாக்குவர். (௫௮)

விஞ்ஞானகலருக்கு ஆணவ மலமொன்றும் பந்தம், மாயையுங் கன்மமு மில்லாதிருந்தால் பந்த நீங்காதாகையால், மாயையிலே சுத்த தனுவுஞ் சுத்த கன்மமு முண்டு. அப்படி உண்டாயிருக்கையிலும் இல்லையென்றது அந்த இரண்டினாலும் அவர்களுக்கு மயக்க மின்மையின். (௫௯)

பிரளயாகலருக்கு மலமுங் கன்மமும் பந்தம், சரீரம் இல்லாதிருந்தாற் கன்மம் புசிக்கப்படா தாகையினாலே அசுத்த மாயாதனு உண்டு. அப்படி உண்டாயிருக்கையிலும் இல்லையென்றது அந்த இரண்டினாலும் அவர்களுக்கு மயக்க மின்மையின். (௬௦)

சிவன் சத்தியுடனே கூடினாற் பிரபஞ்சமுண்டாம்; சத்தி சிவத்துடனே கூடினாற் பிரபஞ்சமுண்டாகாது. ஆன்மா போதத்துடனே கூடினாற் பிரபஞ்சமுண்டாம்; போதம் ஆன்மாவிற் கூடினாற் பிரபஞ்சமுண்டாகாது. இதற்கு வசனம் ‘இருவினை யின்பத் துன்பத்து’ [சிவஞான சித்தியார், ii, 4] என்பது காண்க. (௬௧)

முப்பத்தாறு கருவியுந் தத்துவங்கள்; புறநிலைக்கருவி அறுபதும் தாத்துவிகங்கள். தத்துவங்களுக்குப் பொருள் அழியாதிருத்தல். சிவன் ஆன்மா மலம் மாயை இவற்றைத் தத்துவமென்றுஞ் சொல்லலாம். தாத்துவிகங்களெல்லாம் அழிந்துபோம். தத்துவங்களுக்குத் தொகையில்லையென அறிக. (௬௨)

ஆன்மாவுக்கு மலப்பிணியினாலே சரீரம் உண்டானது. சிவனுக்கு ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கும் ஆசையாகிய வியாதியினாலே திருமேனி உண்டானது. ஆன்மாவினுடைய மலப்பிணியைத் தீர்க்கும் மருந்தாவது பிராரத்தம். ஆன்மா பிராரத்தத்தைத் தான் புசித்தால் மலப்பிணி நீங்காது; சிவனுக்குக் கொடுத்தால் மலப்பிணி நீங்கும். (௬௩)



எண்ணிறந்த கோடி ஆன்மாக்கள் மோட்சத்தை அடையவும் பின்னும் ஆன்மா குறையாதிருத்தல் உலவாக்கிழியிலே திரவியம் எடுக்க எடுக்கக் குறையாதிருத்தல் போலுமென அறிக. (௬௪)

ஆணவ மலம் தன்னைப் பிடித்தவனை மயக்கும் பிடியாதவனை மயக்காது என்பதற்கு உவமை: ஒரு விடனானவன் ஒரு வேசியைப் பார்த்தவிடத்து அவள் அவனை மயக்குகிறது போலும்; சன்னியாசிகள் வேசியைப் பார்த்தபோது அவர்களை அவள் மயக்காதது போலும். (௬௫)

சரீரத்திரிவாவது பாம்பு சட்டை கழற்றினாற்போல; ஆன்மா தூலதேகத்தை விட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு நரகத்திலே சென்று துன்பத்தை அனுபவிக்கிற நிமித்தம் பூதசரீரத்தைப் பொருந்தலும், சுவர்க்கத்திலே சென்று சுகத்தை அனுபவிக்கிற நிமித்தம் பூதசார சரீரத்தைப் பொருந்தலும், பூமியிலே சென்று சுகதுக்கங்களை அனுபவிக்கிற நிமித்தம் பூதபரிணாம சரீரத்தைப் பொருந்தலுமாம்.

இடத்திரிவாவது புள்ளானது முட்டையை விட்டுக் கொம்பிலே யிருத்தல்போல; ஆன்மா தூலதேகத்தை விட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு நரகசுவர்க்கங்களாகிய ஈரிடத்திலேயும் செல்லுதல். இதற்குச் சித்தர்கள் பாகாயப் பிரவேசம் பண்ணுதலுமாகும்.

அறிவுத்திரிவாவது ஆன்மாக்கள் நனவிலே கண்ட செய்தியெல்லாங் கனவிலே மறந்தாற்போல; ஆன்மா தூலதேகத்தை விட்டு நீங்கிச் சூக்குமதேகத்தோடு பூதசரீரத்தை

யும் பூதசார சரீரத்தையும் பொருந்தி நரக சுவர்க்கங்களாகிய ஈரிடத்திலும் அடைந்தபோது மயங்கி யறிதல். (௬௬)

ஆன்மாக்களுக்குக் கன்மத்தை யார்ச்சித்த முறையிலே நுகர்ச்சி வாராது. முன் செய்த கன்மம் பின்னும் பின் செய்த கன்மம் முன்னும் மாறி மாறி வன்மை மென்மைக் கீடாக நுகர்ச்சி வரும். அஃதெப்படியென்னில், ஒருவன் முதல் நாள் பனங்கொட்டை போட்டான், மறுநாள் தென்னம்பிள்ளை வைத்தான், மூன்றாம் நாள் கத்தரி நட்டான், நாலாம் நாள் கீரை விதைத்தான். கீரைக்குப் பலன் பதினைந்து நாளிலும், கத்தரிக்குப் பலன் ஒரு மாதத்திலும், தென்னம்பிள்ளைக்குப் பலன் அஞ்சு வருடத்திலும், பனைக்குப் பலன் முப்பது வருடத்திலும் வருகிறதேயன்றி வைத்த முறையிலே வாராததுபோல வென அறிக. (௬௭)

ஞானவான்களுக்குக் குரு லிங்க சங்கமம் உண்டானாற்போலப் பெத்தான்மாவுக்குங் குரு லிங்க சங்கமம் உண்டு. அஃதெப்படி யென்னில், பெண்டிர் குரு, பிள்ளை லிங்கம், சுற்றத்தார் சங்கமம். (௬௮)

நிருவாணதீட்சையாவது இரண்டு விதமாக இருக்கும். அஃதேதென்னில், சத்திய நிருவாணமென்றும் அசத்திய நிருவாண மென்றுமாம். அவற்றுள் அசத்திய நிருவாணமாவது அதிதீவிர சத்திநிபாத மில்லாத சீடனுக்கு அறிவித்தா லறியுந் தன்மை யில்லாதபடியினாலே ஆறத்துவாவையும் அறிவியாமல் தீட்சையினாலே அவற்றை நீக்குதல். தேக நீங்குதலோடு கூடிய சத்திய நிருவாணமாவது அறிவித்தா லறியுந் தன்மையுடைய சீடனுக்கு ஆறத்துவாவையும் அறிவித்து அவற்றை நீக்குதல். (௬௯)

சிவனுக்கு அழியாத் திருமேனி ஆன்மாவேயாம். சிவலிங்க விக்கிரகம் முதலான திருமேனிகள் சருவ சங்கார



காலத்திலே நீங்கிப்போகும்; ஆன்மாவாகிய திருமேனி நீங்காது. (௭௦)

பரமேசுரன் திருமேனி கொள்ளாவிட்டால் பஞ்சகிருத்தியம் உண்டாகமாட்டாது; பிரமா விஷ்ணு முதலாகிய தேவர்களுக்கும் நரர்களுக்கும் வேதாகமங்களை அறிவிப்பாரில்லை; இம்மூவர்க்குங் குரு சந்தானத் தொடர்ச்சியும் உண்டாகமாட்டாது; ஆன்மாக்களுக்குப் போக யோகங்களும் உண்டாகமாட்டா; குருவானவர் குண்ட மண்டலாதிகளாற் பாசத்தை நீக்குந் தீட்சை உண்டாகமாட்டாது; ஆகையாலே கர்த்தா திருமேனி கொண்டு வருவாரென வறிக. இதற்கு வசனம் 'உருமேனி தரித்துக் கொண்டது' [சிவஞானசித்தியார், i, 55] என்ற திருவிருத்த முதலும், 'உருவருள் குணங்களோடும்' [ஷை, i, 47] என்ற திருவிருத்த முதலுமென வறிக. வாராரென்பதற்குச் 'சிவனரு வுருவு மல்லன்' [ஷை, i, 70] என்றதில் அறிக. (௭௧)

பரமேசுரன் பிரம விஷ்ணு ருத்திரன் மகேசுரனென்னு நான்கு ரூபமுமாகான்; பரவிந்து, பரநாதம், அபரவிந்து, அபரநாதம் என்னும் நான்கு அரூபமுமாகான்; சதாசிவமென்னும் ரூபாரூபமு மாகான்; இந்த ஒன்பது ரூபத்திலும் வியாபகத்தினாலே கூடியிருந்தாலும் அவற்றைப் பொருந்தாதவனேயாவ னென அறிக. (௭௨)

சிவஞானம் ஒன்றினாலே அறிகிறதேயல்லாமல் மற்ற ஞானங்க ளொன்றினாலேயுஞ் சிவனை யொருகாலும் அறியக்கூடாது. பக்குவான்மாவுக்கு ஞான சாத்திரத்தைத் தானே படித்தால் ஞானம் விளங்காது, ஞானாசாரியர் சீடனுடைய பக்குவமறிந்து ஞானசாத்திரத்தைப் போதித்தால் ஞானம் விளங்கும். அஃதெப்படிப்போல வென்றால், தண்ணீர்த்தாகமுடையவன் சமுத்திரத்துத் தண்ணீரைத் தானே குடித்தால் தாகந் தீராது, மேகமானது சமுத்திரத்துத்

தண்ணீரைப் பருகி உவரையெல்லா மகற்றித் தண்ணீரைக் கொடுத்தால் தாகந் தீரும். ஆதலால் தண்ணீர்த்தாக முடையவனைப்போலும் ஆன்மா, சமுத்திரசலத்தைப் போலும் ஞான சாத்திரம், மேகத்தைப் போலும் ஞானாசாரியர். (௭௩)

மோட்ச காமியானவன் ஆன்மாவுக்குள்ளே யிருக்கிற சிவத்தை வெளிப்படுத்தல் காட்டத்திலே யிருக்கிற அக்கினியை அரணி நாட்டிக் கடைந்து வெளிப்படுத்தல் போலுமென அறிக. இதற்கு வசனம் தேவாரம் 'விறகிற் றீயினன்' [அப்பர்: தனித் திருக்குறுந்தொகை, ii, 10] என்பதிற் காண்க. (௭௪)

ஆன்மாவுக்கு எல்லாவற்றிற்கும் முந்தினது பக்குவம், அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம், அதற்குப் பிந்தினது மலபரிபாகம், அதற்குப் பிந்தினது சத்திநிபாதம், அதற்குப் பிந்தினது இருவினையொப்பு, அதற்குப் பிந்தினது ஆசாரியர் திருமேனிகொண்டு எழுந்தருளி வருதல், அங்குத்தி அனுக்கிரகம் பண்ணுநின்ற ஞானசாத்திரம். இது மோட்சமடையு முறைமையென அறிக. (௭௫)

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டர் புராணம் பெரிய புராணம் என்று பெயரெய்தியதற்குக் காரணம்

[வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின் "

என்பது தமிழ் மறை.

ஒரு நாட்டாரின் மனப்போக்குக்கு ஏற்பவே அவர் தம் மொழி அமைப்பும், இலக்கியங்களும் ஏற்படும் என்பது அறிஞர் பலரும் அறிந்ததே. நம்தண்டமிழ் நாட்டவர் பண்டு தொட்டே கல்வியே மக்களுக்குக் கண் என்னும் அக்கண்ணாற் பெறும் பயன் இம்மை வாழ்வைச் செம்மையாய் நடாத்தி உலகப் பற்றற்று மெய்ப்பொருளை யுணர்ந்து அவனை வழிபடலேயாம் என்னும் உறுதி கொண்டவர். இதனாலன்றோ தமிழ் மக்களின் சேம வைப்பாகவுள்ள தொல்காப்பியம் என்னும் செந்தமிழ் இலக்கண நூலில்,

" காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே."

என்ற நூற்பா எழுந்தது.

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் மற்றீண்டு வாரா நெறித்தலைப்படுவ' தியல்பாதலின், அதுவே நம் தண்டமிழ்க் கல்வியின் சிறந்த நோக்கமாம். அது நோக்கமாகவே நம் தமிழ் மொழியை உண்மையிற் பயில்வோராவர் 'புறங்

கரை யொழுகு செம்புண்ணிலியென வருங்கதை' கொள்ளாராய்ப் பிறவியின் பயனையளிக்க வல்ல செந்நெறிகளைத் திறம்படக் கூறு நூல்களையே பெரிதும் பயில்பவர்களே. கலகலகூ உந்துணை யுதவுவன பயில்வோ ராகார்.

அங்ஙனம் பிறந்துள பயன் பெறுமாறு வழிகாட்டும் நூல்கள் பலவற்றுள் திருத்தொண்டர் புராணம் தலை சிறந்ததாகும். இத்தெய்வத் திருநூல் பிறவிப் பயன் எய்த விழைவார் மேற்கொள வேண்டிய சரியையாதி நான்கு நெறிகளையும் தெள்ளிதிற் கூறுவதோடு அந்நெறிகளில் நின்ற ஆன்றோர் பலர் தம் அநுபவங்களையும் ஆண்டாண்டு இனிது விளக்கிப் போதருகின்றது. அதனால் அந்நூல் திருநெறியைக் கற்பிக்கும் ஓர் செவ்விய இலக்கணமாகவும் இலக்கியமாகவும் அமைந்துள்ளது.

“செனன மொன்றிலே சீவன் முத்தனுக்கு” உய்க்கவல்லதும் “யாது சமயமும் வணங்கும் இயல்பினதாகி” யுள்ள சைவ சித்தாந்த நுண்பொருட்டிறங்களுக் கெல்லாம் எடுத்துக் காட்டுதவ வல்லது திருத்தொண்டர் புராணம் ஒன்றே.

உலக வாழ்க்கையில் எவ்வெத் தொழிலினின்றோரும் அவ்வத் தொழிலிலேயே நின்று எத்தொழிலு மற்ற இறைவனை வழிபடற்கேற்ற வழிகாட்ட வல்ல நூல் இதனினும் சிறந்தது வேறு யாதுளது?

நிற்க. இந்நூல் செந்நெறி கற்பிக்கும் திப்பிய நூலாவதோடு நில்லாமல், வெறும் இலக்கிய நயத்தையே பெரிதும் பொருட் படுத்துவோர்க்கும் நடுநிலைமையில் ஆராய்வாராயின், அந்நயங்களில் வேறெந் நூலுக்கும் பிற்பட்டதன்றென்பதும் புலனாம்.

இழுமென்னு மோசையுடைய செந்தமிழ்ச் சொற்களால் விழுமிய பொருள் கூறுவதாய், அமங்கலச் சொற்கள் புணராது ஆற்றுப் புனல் பொருள் கோள் மலிந்து இயற்கைப்



பொருள்களின் எழில் நலம் நிறைந்த இந்நூல் தமிழரின் இலக்கியப் போக்கைச் செம்மையிற் றெரிவிப்பதாகும்.

இந்நூலை ஆக்கியோர் அருண்மொழித் தேவராம் தெருண்மிகுப் பெரியாராவர். இந்நூற்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராண மென்பதாம். இதனை,

இங்கித னாமங் கூறி னிவ்வுல கத்து முன்னாட்
டங்கிரு ளிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போ னீக்குந் **திருத்தொண்டர் புராண**மென்பாம்.

என ஆசிரியர் கூறியவாற்றால் அறியலாகும். இஃது இங்ஙனமாக, இதனைப் பெரிய புராணமென்றே மக்கள் வழங்கி வருகின்றனர். இதன் காரணத்தை ஆராய்வாம். உலகில் செயற்கருஞ் செய்கை செய்வார் பெரியராவர் *என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் கருத்தாகும். திருத்தொண்டர் புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள நாயன்மார்களில் பலர் செயற்கருஞ் செயல்கள் செய்தவராவர். இச்செயல்களைப் புலவர் பெருமானாகிய சிவப்பிரகாச அடிகள்,

“கடனிற வண்ணன் கண்ணென் றிடந்து
மறைச்சிலம் பாற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த **சுருதிநா யகற்கு**
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்திக் கொடுத்து
மகப்படு மணிமீ னாற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துங்

---

* செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்மலர்க் கோதை கைமலர் அணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்.''

என்று நால்வர் நான்மணி மாலையில் குறிப்பிடுந் திறனோக்கி மகிழ்தற் குரியதாகும். இங்ஙனம் செயற்கருஞ் செயல் செய்த பெரியார்களின் வரலாற்றை உணர்த்துகின்றமையால் இந்நூல் பெரியர் புராண மெனப் பெயர் எய்திய தாதல் வேண்டும். பெரியர் புராண மென்பது நிலைமொழியீற்று ரகரங் கெட்டுப் பெரிய புராணமாயிற்று.

மேற்காட்டிப் போந்தவாறு, செயற்கருஞ் செயல்செய்த பெரியார்களின் வரலாற்றை உணர்த்து கின்றமையான், திருத்தொண்டர் புராணம், பெரிய புராணமெனப் பெயரெய்தியதாதல் வேண்டு மென்பது பெற்றாம்.



**உரை :**—நானே, (வீடடைதற்குரிய) நற்றவஞ் செய்தேன். (வீடு விரும்புவார் புகலும் நட்பவைந் தெழுத்தாய) சிவாயநமவென்பதைச் சொல்லப் பெற்றேன். தேன்போலவும், இனிய பாலமுதம் போலவும் இனிமை பயக்குஞ் சிவபெருமான் தானே வலிதில் எழுந்தருளிவந்து என்னுடைய மனதிற் புகுந்தருளிப் புலால் நிறைந்த உடம்பில் உயிர் வாழ்தலைக் கண்டித்து அதனை வெறுத்திடும்படி அடியேனுக்கு அருள் செய்தான்.

**குறிப்பு :**—நமசிவாய வென்பது தூல பஞ்சாட்சரம்; போகமளிப்பது. சிவாயநம வென்பது சூட்சும பஞ்சாட்சரம்; வீடளிப்பது. கo

திருச்சிற்றம்பலம்



187099

திருவாரூரில் அருளிய

# திருப்புலம்பல்

## சிவானந்த முதிர்வு

### கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**பூ**ங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே.

**உரை** :—அழகிய தாமரை மலரில் தங்கும் நான்முகனுந் திருமாலுமறியாத ஞானநெறியால் அடையப்படுபவனே! கோங்கம்பூவை யொத்த நகிலையுடைய உமையம்மை பாகா! திருவெண்ணீறு முற்றிலும் பூசப்பெற்றவனே! உயர்ந்த மதில் சூழ்ந்த திருவாரூரினை இடமாக வுடையானே! அடியேன் உன்னுடைய கழலணிந்த திருவடிகளிரண்டினையு மல்லாமல் வேறெவற்றையும் ஒருசிறிதும் புகழமாட்டேன்.

**குறிப்பு** :—திருமாலுக்கும் பிரமனுக்கும் கடவுளை யறியும் சிவஞானம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லாமையால் அவர்கள் அறியாத நெறியான், என்றார். கோங்கி னரும்பை நகிலுக் குவமையாகக் கூறுவர். அலர் என்பது விரியும் பருவத்தரும்பு. வெண்ணீறாடி என்பதற்குத் திருவெண்ணீற்றில் முழுகினவனே என்றலுமுண்டு. க

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி பசுபதீ மழவெள்ளை [நான்
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே.

**உரை** :— சடையவனே! தழலின்கண் கூத்தியற்று பவனே! மூன்று இலைபோன்ற கிளைகளை உடைய சூலாயுத முடையவனே!



மேலான அறிவொளியே! உயிர்களுக்குத் தலைவனே! வெண்ணிறமுடைய இளங்காளையை வாகனமாக வுடையவனே! எங்கும் பரவிய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையானே! முதல்வனே! உன்னையல்லால் வேறு உற்ற துணையை நானறிகிலேன்.

**குறிப்பு** :—அக்கினியின் இதயத்தி லிருப்பவன் சிவபிரானாகலின், தழலாடீ என்றார். தயங்கு = விளங்கு. பசு = கட்டப்பட்ட உயிர்கள். உறுதுணை = இடருற்றகாலைத் துணை, பெரிய துணை யெனவுங் கூறுவர். உ

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

**உரை** :—திருக்குற்றாலத்திலே விரும்பி வீற்றிருக்குங் கூத்தப் பெருமானே! உறவினரையான் வேண்டுவனல்லேன், ஊரும், பேரும் எனக்கு வேண்டுவனவல்ல. (திருவடிஞானம் பெறாத) கலைஞானமுடையாரை யான் விரும்பேன். கற்கவேண்டியனவும் இனிப் போதுமானவையே. கழல்கள் ஒலிக்கின்ற உனது திருவடிக்கே கன்றை உடைய பசுவின் மனம்போலக் கனிந்து உருகுவதையே யான் உன்பால் வேண்டுகின்றேன்.

**குறிப்பு** :—கற்பன வெல்லாம், சுட்டறி வுடையார்க்கே பயன் படுவன. அகண்ட அறிவுடையார்க்குச் சுட்டறிவினாற் பெறுங் கலைஞானம் புதிது புதிதாக வேண்டிய தின்மையின் கற்பனவும் இனியமையு மென்றார். கற்றா = கன்று + ஆ = கன்றினையுடைய பசு. பசு கன்றின்பா லன்புடைமையாற் பால் சுரத்தலின், அதனை எடுத்து விதந்தனர். ங

திருச்சிற்றம்பலம்

### தில்லையில் அருளிய

# குலாப்பத்து

## அநுபவம் இடையீடுபடாமை

### கோச்சகக் கலிப்பா

*திருச்சிற்றம்பலம்*

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரைநடை :—** குலாத்தில்லை யாண்டானைக் கொண்டு என்பதைத் தெளிந்து என்றதன் பின் வைக்க.

**உரை :—**அடியேன் திருவோடுங் கோவணமுமே பற்றுவன என்று நினைந்து உள்ளமுருகித் தேடுகின்ற பொருள் சிவனது திருவடியே எனத் தேறி விளங்குகின்ற தில்லை யாண்டவனைப் பற்றிக் கொண்டு உயிரும்அதன் கூடாகிய உடம்பும் ஆனந்தத்தால் நிறைந்து தள்ளாட யானும் வளைந்து கூத்தாடுவேன்.

**குறிப்பு :—** குமண்டையிட = நிறைவினால் அசைந்திட; தெவிட்ட.
க

துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தன தாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரைநடை :—**எனைத்தனதாள் முயங்குவித்த குலாத் தில்லை யாண்டானை அடியேன் கொண்டன்று, துடியேரிடு...பிறவேன்.

**உரை :—** என்னைத் தனது திருவடியின்கண் புணர்வித்த விளக்கம் மிக்க தில்லையாண்டவனை அடியேன் பற்றினேன். ஆதலால்



உடுக்கைபோல அழகிய நுணுகிய இடையை உடைய, புனிதச் சொல்லுடைய பெண்டிர் தோள்கள்பாலுள்ள விருப்பத்தால் பாவமிகுதற்கு இடமாகிய தீய செயல்கள் எத்தனை செய்துவிட்டாலும் நான் இறக்கமாட்டேன் ; பிறக்கவுமாட்டேன்.

**குறிப்பு :—**ஞானிகளுக்கு நேரும் பிராரத்த வினைகளை இறைவன் ஏற்றுக்கொள்வானாதலின் தனக்கு மேற் பிறவிக்கு இடமில்லையென்பது குறிப்பித்தார்.
உ

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை :—**எலும்புகளை உள்ளுருகச் செய்து, இருவினைகளின் வலியினை ஒழித்து, பிறவித் துன்பத்தை நீக்கி, உடன்பாடாகவும் எதிர் மறையாகவுமுள்ள இருவகைப் பற்றுக்களையுங் களைந்து, புனிதஞ்செய்து, எதிர்காலத்தில் வரக்கூடிய வினைப் பயன்களை முழுவதுமளித்தற்பொருட்டு என் நெஞ்சத்தே எழுந்தருளிய அன்பு வடிவான விளக்கமிக்க தில்லை யாண்டவனை யான் பற்றிக்கொண்டேன்.

**குறிப்பு:—**என்பினுட்பகுதியும் அன்பினால் உருகுதல்பற்றி 'என்புள்ளுருக்கி' என்றார். ஈடழித்து=இருவினைப் பயனையும் சமமாக அழித்து எனவு முரைப்பர். துவந்துவம்=விருப்பு வெறுப்பு, போற்றல் இகழ்தல், தழுவல், அடித்தல் என்பனபோல எதிரிடையாய இருவகைச் செயல்களும் குணங்களுமாம். முன்பு - எதிர்காலம். அன்பின் என்பதில் இன்சாரியை. அன்பு என்பதை ஆண்டானை என்பதோடு முடிக்க.
௩

குறியும் நெறியும் குணமுமிலார் குழாங்கள் தமைப்
பிறியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை:—**அடையாளமும், வழியும், முக்குணச்சார்பும் இல்லாதவராய்ப் பாசக்கூட்டங்களை விட்டு நீங்குமெண்ணத்தினராய், உள்ள அடி

யார்கள் தன்னைப் பிரிதற்கரிய தன்மை யுடையவனே, அன்பு மிகுகின்ற உள்ளத்திற் றோன்றி அவைகட்கு அமுத மயமாக விளங்கும் தூய நிலையுடையானை எல்லாவற்றையும் அறிகின்ற விளக்க மிக்க தில்லை யாண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

**குறிப்பு:—** குறி என்றதற்குப் பெயரென்றுங் கூறுப. நெறி என்பது சமயவழி. குழாங்கள் என்பதற்குச் சுற்றமென்னுந் தொல் பசுக் குழாங்களென வுரைப்பர். பெற்றி = தன்மை. செறியும் = (அன்பு) மிகும். உருத்து = உருவோடு தோன்றி.

பெருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை :—**பேரும் பல்வகைக் குணங்களும் நம்மைக் கட்டுப் படுத்தற் கேதுவாகிய இந்தப் பிறவியைத் தூர்ந்தொழியும்படி மலமாகிய குற்றத்தை யறுத்து அடியார்கள் எல்லாரும் இறைவனைக் கூடும்முறையிலே சிவபெருமானது அருளாகிய தேனினை யுண்டு நிறைவடைதற் கேதுவாகிய விளக்கமிக்க தில்லை யாண்டவனைப் பற்றினேன்.

**குறிப்பு :—**உடம்பு காரணமாக உயிரிற்கொரு பேரும் தன்மைகளும் பேசப்படுதலின் பிறவியே அதற்குக் காரணமென்றார். தூரும் பரிசு = பற்றறக் கழியும் வண்ணம். வகையால் = வகையினைப் பின் பற்றி. ஆரும், என்பதைத் தில்லைக்கு அடையாக்குவாரு முளர். ௫

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்கன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை :—**மரக்கொம்பில் அரும்பாகவும், குவிமலராகவும், காயாகவும் ஆய்கனிஉதிர்தல்போல உடம்பும் அவ்வாறாக வீணேபழுத்து முதிர்ந்து இவ்வாறு பயனில்லாமல் அழிந்துபோகாதபடி நான் நம்பித் துணையாகக் கொண்ட என் மனமானது கடவுளைச் சேரும்படி



நான் விரும்பும் அழகிய பொன்னிறலாகிய விளக்க மிக்க தில்லை யாண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

**குறிப்பு:—**கொம்பு உலகத்திற்கும், அரும்பு, மலர், காய் முதலியன உடம்பின் வளர்ச்சி நிலைகளுக்கு முவமையாகும். போகாமே, வண்ணம் அணுகும், தில்லை, கொண்டன்றே என முடிக்க. ௬

மதிக்குந் திறலுடைய வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்(கு)
அதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை :—**எல்லாரும் புகுதற்குரிய வலிமை வாய்ந்த மன வன்மை யுடைய இராவணனுடைய தோள் நெரியும்படி மிதித்த இறைவன் திருவடியானது எனது தலைமேற் பொருந்தி யிருக்குங்கால், எழுந்து தோன்றக்கூடிய பசுபாச வுணர்ச்சி யாதும் இல்லேமாகினேமென்று மகிழ்ந்து ஆரவாரித்தற்கேதுவாகிய விளக்கமிக்க தில்லையின்கண் ஆண்டவனைப் பற்றிக்கொண்டேன்.

**குறிப்பு :—**இராவணன் கதை வெளிப்படை. கதிக்கும் = மேற்பட்டு எழும். பசு = உயிரின் தன்னினைவு. பாசம் = மும்மலமாகிய கட்டு. இங்கு = இவ்வுலகில். அதிர்க்கும் = ஆரவாரிக்கும். ௭

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என் தலைமேல் நட்டமையால்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை :—**பூமியைத் தோண்டும் இயல்புடைய கரிய விறகுக் கட்டையை ஒத்த பன்றியின் புறத்தே, காட்டகத்தில் நடந்த திருவடியை என் தலைமேல் நாட்டினமையால் என்னை வெல்லுந் திறமையுடைய ஐம்பொறிகளாகிய கொடியவரது வலிமையுடைய ஆடலை அடக்கவல்ல விளக்க மிக்க தில்லையாண்டவனைப்பற்றிக்கொண்டேன்.

**குறிப்பு :—**'கருமுருடு' என்றது பன்றியின் நிறத்தையும், வலிமையையுங் குறித்தவாறு. அர்ச்சுனன் தவத்திற்காக இறைவன் வெளிப்பட்டு அருள்புரியக் கருதிய காலை, இறைவன் வேட்டுவ வடிவங்கொண்டு, மூகாசுர னென்பவன் கொண்ட பன்றி வடிவத்தின்

பின், அதனை ஒட்டிச் சென்றமை பாரதத்திற் காண்க. கண்டகர்=கீழ்மக்கள்; கொடியவர். வல்லாட்டை = வலிமிக்க ஆட்டங்களை. அடக்கும் என்பதை ஆண்டானென்பதனோடு முடிக்க. அ

பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கிழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை:—** விளையாத பாழான வயலினையடைந்து நன்மையின்றிக் கிடக்கு மியல்புடைய எனக்கு முற்பிறப்பிற் செய்த தவத்தால் முடிந்து வைத்த நிதி கிடைக்கப் பெற்றுச் சிவந்த தாமரை போன்ற திருவடிகளையுடைய சைவனாகிய கடவுளுக்கு இழிவான எனது தலையினால் அடிமைத் தொழில் செய்தற்குரிய விளக்க மிக்க தில்லை யாண்டவனாகிய கூத்தப் பெருமானைப்பற்றினேன்.

**குறிப்பு:—**பாழ்ச் செய்=பாழான வயல். இங்கே பயனில்லாத உடம்பினைக் குறிக்கும். தவத்தால்=நல்வினைப் பயனால். கிழியீடு=புதையல் போல் துணியிற் கட்டியிடப்பட்ட நிதி. செய்ய தாமரைத் தாள் என மாறுக. 'ஐயாறதனிற் சைவனாகியு' மென்றபடி இறைவன் திருவையாற்றில் சைவனாக வடிவங் கொண்ட கதைமுன் கூறப்பட்டது. ஆள்=அடிமைத் தொழில். கூ

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

**உரை:—**திரட்சியும் வரைகளுமுள்ள தனிலை உடைய, பூங்கொம்பை யொத்த உமையம்மை பாகனுக்கு நேர்மை உடைய உள்ளத்தோடு பணிவிடை செய்கின்ற எனக்கு இப்பிறப்பில் நிகழக் கூடிய வினைப் பயன்களனைத்தையும் இவ்வுலகிலேயே ஒழிக்க வல்ல, தாய் போன்ற, விளக்க மிக்க தில்லை யாண்டவனைப் பற்றிக்கொண்டேன். கO

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# அற்புதப்பத்து

அநுபவமாற்றாமை

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மையலாய்இந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியுளகப்பட்டுத், தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் தலைதடு மாறாமே, பொய்யெ லாம்விடத் திருவருள் தந்துதன் பொன்னடி யிணைகாட்டி, மெய்ய னாய்வெளி காட்டிமுன்நின்ற தோர் அற்புதம் விளம்பேனே.

**உரை:—**(நில்லாதவற்றை நிலை யென்றுணரும்) மயக்க வுணர்ச்சியுடையனாய் இந்த மண்ணுலகிலே வாழ்க்கை யென்னுங் கடலினுள் ளகப்பட்டு, பெண்கள் என்கிற சுழியிற் சிக்கி, நான் அறிவு மாற்றமுறாமல், நிலையாத பயனற்றவை யெல்லாம் விட்டு நீங்கும்படி திருவருள் கொடுத்துத் தனது அழகிய திருவடிகளிரண்டையுங் காட்டி யருளி, நிலை பேறுடையனாகும் பொருட்டு அருள் வழி காட்டி என் முன்பாக வெளிப்பட்டு நின்றதொரு வியப்பான செயலை இன்னதென்று சொல்ல அறியேன்.

**குறிப்பு:—**மையல்=மயக்கம். வாழ்வெனுமாழி=பிறவிக்கடல். பெண்டிரை மணப்பதால் மக்களுஞ் சுற்றமும் சூழப்பெற்று அவர்கள் பாசத்தினின்று புறம் போதலருமையாகலின் சுழித்தலைப்பட்டு, என்றார். தலை=அறிவுக்கு இடம். மெய்யனாய் என்பதற்குத் திருமேனி உடையனாய் என்றும், வெளிகாட்டி என்பதற்கு அதனை வெளிப்படக் காட்டி என்று முரைப்பர். க

ஏய்ந்த மாமலரிட்டுமுட் டாததோர்இயல்பொடும் வணங்காதே, சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந் தலைதடு

மாறுகிப், போந்து யான்துயர் புகாவணம் அருள்செய்து பொற்கழ லிணைகாட்டி, வேந்த னாய்வெளி யேஎன்முன் நின்றதோர் அற்புதம் விளம்பேனே.

**உரை :**—பொருத்தமான அழகிய பூக்களைத் தூவி, முட்டுப் படாத நல்லியல்போடு இறைவனை வழிபடாது, சந்தனக் குழம்பு நிறைந்த நகிலை உடைய அழகிய பெண்டிர்களோடு கலந்து தடுமாறிப் போய் யான் துன்பத்திலழுந்தாதபடி திருவருள் புரிந்து, கழலணிந்த இரண்டு பொன்னடிகளையுங் காட்டி என்னரசனாய் வெளிப்பட என்முன் நின்ற ஒப்பற்ற வியப்புச் செய்கையை இன்னதென்று சொல்ல அறியேன்.

**குறிப்பு :**—ஏய்ந்த மாமலர்=பழுதில்லாத வாசனையுடைய நன்மலர். முட்டாத தோரியல்பாவது=நன்மை வரினுந் தீமை வரினும் அவற்றைப் பொருட்படுத்தாமல், பயன் கருதாது வழிபடுதல். சாந்தம்=சந்தனம். தையல்=அழகு. ௨

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து நானென தெனும்மாயக், கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக் கழறியே திரிவேனைப், பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய அரும்பொருள் அடியேனை, அடித்தடித்துஅக் காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே.

**உரை :**—மண்ணுலகத்திலே தக்கவன் போல நடித்துப் பொய்யான பல காரியங்களைச் செய்து, யானெனதென்னுஞ் செருக்கில் விளைந்த மயக்கமாகிய பாம்பு கடித்த இடத்திலே முன் வினையாகிய விடந்தங்கிமிகுதிப்படவே, புலம்பியலையு மியல்புடையேனைத்தானே பிடித்து எதிரே எழுந்தருளி நின்று அந்தப் பெரிய வேதங்கள் தேடி அடைதற்கரிய பரம்பொருள் அடியேனை எளிதாகத் தண்டித்துத் தண்டித்துப் பேரின்பமாய சர்க்கரையை முற்படத் தின்பித்த அருஞ்செயலை இன்னதென்று நான் சொல்ல அறியேன்.

**குறிப்பு :**—மாயம்=மயக்கம், அறியாமை பற்றி வருஞ் செருக்கு. செருக்கினால் ஒரு காரியத்தைச் செய்தவுடன் அதன் பயன் முற்செய்த வினைப் பயனுக் கேற்ப வருதலால் முன்வினை யென்றார். அக்காரம்=சர்க்கரை. பேரின்பத்திற்கு உருவகம். தீற்றிய=தின்பித்த, நுகர்வித்த. ௩



பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை நினையாது பொய்களே புகன்றுபோய்க், கருங்கு ழலினார் கண்களால் ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத், திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத் திருவொடும் அகலாதே, அருந்து ணைவனாய் ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.

**உரை :**—(மாறிமாறி வந்து) பொருந்துகின்ற இந்தப் பிறப்பிறப்புக்களைக் களையும் வழிகளை எண்ணாது, நிலையாதனவற்றையே விரும்பிப் போய் அல்லது பொய்களையே சொல்லித் திரிந்து கரிய கூந்தலையுடைய பெண்களுடைய கண்களினாலே, தாக்குண்டு கலக்கமுற்றுக் கிடக்கும் இயல்புடைய என்னை இறைவன் யான் திருந்துவதற் கேதுவாகிய தனது செய்ய பாதங்களிலுள்ள சிலம்புகள் ஒலித்திடத் தனதருட் சத்தியோடு நீங்காது. பெறுதற்கரிய உதவியாளனாய் ஆட்கொண்டருளிய அருஞ் செயலை நான் இன்னதென்று அறியமாட்டேன்.

**குறிப்பு :**—இவை என்பது பிறவியை நீக்கும் வழிகளைக் குறித்து நின்றது. புகன்று=விரும்பி ; சொல்லி. ஏறு=இடி, எறியப்படுதல். கண்களாகிய வேலினாலே எறியுண்டு எனவுங் கொள்க. சிலம்பவை என்பது பிரணவம் முதலிய மந்திர ஒலிகளைக் குறிக்குமென்ப. திரு=அருட் சத்தி. ௪

மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும் மங்கையர் தம்மோடுங் கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை வீடுதந் தென்றன் வெந்தொழில்வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி ஆடுவித்தென தகம்புகுந்தாண்டதோர் அற்புதம் அறியேனே

**உரை:**—செல்வமும் உறவும் ஏனைய போகப் பொருளும் பெண்களுமாகிய இவற்றோடு தொடர்வுற்று அவற்றுள்ள நயங்களால் தாக்குண்டு அவற்றைப் பாராட்டித் திரிவேனை, எனது தீவினைகளை அழிக்கும் வண்ணம் தனது மெல்லிய திருவடித் தாமரையைக் காட்டி வீட்டின்பத்தைக் கொடுத்தருளி, என்னை ஆனந்தத்தால் கூத்தாடச் செய்து எனதுள்ளம் புகுந்து ஆட்கொண்ட அருஞ் செயலை, இன்னதென்று அறியமாட்டேன்.

**குறிப்பு** :—குலாவுதல்=பாராட்டுதல். வீட்டுதல்=அழித்தல். வீடு=பாச நீக்கமெனவும், முடிவாய்த் தங்குமிடமெனவுங் கூறுப. விடுபடுதல்=வீடு ; விடுதல்=தங்குதல் தங்குமிடம், வீடு என விருவகையாகவும் பொருள் கொள்க. அகம்=உள்ளம். ரு

வணங்கும் இப்பிறப் பிறப்பிவை நினையாது மங்கையர் தம்மோடும், பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்தி நான் பித்தனாய்த் திரிவேனைக், குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல் கோமளத் தொடுங்கூடி, அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.

**உரை** :—வளைந்து, வளைந்து வரும், இந்தப் பிறப் பிறப்புக்களை நீக்கும் வழிகளை எண்ணாது, மாதர்களோடுங் கலந்து அவர்களது அதரத்தினின்று பெருகும் எச்சில் நீர்ப் பெருக்கி லாழ்ந்து மயக்க முடையேனாய், அலைவேனை, (முக்குணச் சார்பாய) இயல்புகளும், (தத்துவச் சார்பாய) அடையாளங்களுமில்லாத அருட் குணக் கடலாகிய பெருமான், இளமைச் செவ்வியையுடைய அம்மையொடு கூடி வந்து என்னைச் சேர்ந்து ஆட்கொண்டருளிய அருஞ் செயலை நான் இன்னதென்று அறியமாட்டேன்.

**குறிப்பு** :—சுழல்போலப் பிறப்பிறப்பும் மாறிமாறி வருதலால் வணங்குமென்றார். அஞ்சி யீடுபடுதற்குரிய எனவுங் கொள்க. பிணைந்து=நெருங்கிச் சேர்ந்து. கோமளம்=பசிய நிறமென்றும் கொள்ப. சு

இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான் இயல்பொ டஞ் செழுத்தோதித், தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாது நான் தடமுலை யார்தங்கள், மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை மலரடி யிணைகாட்டி, அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம் அறியேனே.

**உரை**:—இந்தப் பிறவியில் இசைவான பூக்களைப்பறித்து முறையாகத் திருவைந்தெழுத்தினைச் சொல்லித் தவறுதலில்லாமல் உனது திருவடிகளில் அவற்றைத் தூவாது பெரிய நகிலை உடைய மாதர்களது கருமுகிலின் தன்மை பொருந்திய கண்களினாலே தாக்



குண்டு பயனின்றிக் கிடக்குமியல்புடைய எனக்குத் தனது திருவடித் தாமரை இரண்டையுங் காட்டியருளி, அப்பன்தானே ஆட்கொண்ட வியப்பினை இன்னதென்று அறியமாட்டேன்.

**குறிப்பு** :—இணைமலர்=தமக்குத்தாமே ஒத்தபூக்கள் என்று முரைப்பர். இயல்பு=முறை. நல்லியல்பு=நன்மனமென்றுங்கொள்க. இறைவழிபாட்டில் தவறக்கூடாதென்பார், தப்பிலாது என்றார். மைப்பு=மைதீட்டிய தன்மை எனவுங்கொள்வர். மைப்பு=கருமேகம், உலவுமென்பது உலாம் என்றாயிற்று. உலவும்=பொருந்தும். கிடப்பேனை=கிடப்பேனுக்கு. எ

ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின இருவினை அறுத்தென்னை ஓசையா லுணர்வார்க்குணர் வரியவன் உணர்வுதந் தொளியாக்கிப் பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால் ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய அற்புதம் அறியேனே.

**உரை**:—இந்த உடம்பையும் உயிரையும் ஊஞ்சல்போல் அங்குமிங்கும் ஆட்டுகின்ற நல்வினை தீவினை என்னும் இரண்டையுங் களைந்து, நூலுணர்வினால் அறியலுறுவார்க்கு அறியமுடியாத பெருமான் எனக்கு ஞானத்தைத் தந்து, உண்மையை வெளிப்படுத்தி, மும்மலக்கட்டுக்களின் தொடர்பைத் தொலைத்து, மிக மேலான தனது பேரருளால் (வாசனா மலமாய்) அவாவை யறுத்து, அடியார்களுடைய திருவடியின்கண் என்னைச் சேர்ப்பித்த அருஞ்செயலை இன்னதென்றறிய மாட்டேன்.

**குறிப்பு**:—இவ்வுடலுயிரான ஊசலாட்டும் எனமாறுக. நல்வினை மேலுலகிற் கிழுக்க, தீவினை கீழுலகிற்கிழுக்க உடலும் உயிரும் ஊஞ்சல்போல் அங்குமிங்கும் அலைதலால் 'ஊசலாட்டு' என்றார். ஓசை என்பது நூற்கல்விக்காகு பெயர். 'நூலுணர் உணரா நுண்ணியோன் காண்க' என்றதுமறிக. உணர்வு=பரஞானம். ஒளியாக்கி=வெளிப்படுத்தி. உயர்ந்தபரம்=மிக உயர்ந்த. ஆசை=வாசனாமலத் தொடர்பு என்பாருமுளர். அ

பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான் புழுத்தலை நாய்போல, இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங் கிணங்கியே திரிவேனை, இச்ச கத்தரி அயனுமெட் டாததன் விரை

மலர்க் கழல்காட்டி, அச்சன் என்னையும் ஆண்டுகொண் டரு
ளிய அற்புதம் அறியேனே.

**உரை:**—காட்டினைப்போன்ற இந்தப்பிறவியிற் பொருந்திப்புழுப் பற்றிய தலையையுடைய நாய்போலப் பெண்களுக்கே விருப்பமானவற்றைச் செய்து அவர்களோ டிசைந்தே அலைகின்ற எனக்கு இவ்வுலகத்திலே திருமாலும் பிரமனும், எட்டமுடியாத தனது வாசனை பொருந்திய திருவடித்தாமரைகளைக் காட்டியருளி, அப்பன் அடியேனையும் ஆட்கொண்டருளிய அருஞ்செயலை இன்னதெனறு அறிய மாட்டேன்.

**குறிப்பு:**—பொச்சை=காடு, வழிதெரியாது அலைதற்கு இடமாகிய காடுபோல உண்மை நெறி இன்னதென்று அறிய முடியாத வண்ணம் இடர் நிறைந்த பிறவி என்பார் பொச்சையான பிறவி என்றார். புழுத்தலை=புழுத்து அலை என்பாருமுளர். அங்கு=அவ்வாறே=அவர்களிச்சைப்படியே. அச்சன்=அப்பன். ௯

செறியும் இப்பிறப் பிறப்பினை நினையாது செறிகுழ
லார்செய்யுங், கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்
உன்னியே கிடப்பேனை, இறைவன் எம்பிரான் எல்லையில்
லாததன் இணைமலர்க் கழல்காட்டி, அறிவு தந்தெனை ஆண்டு
கொண் டருளிய அற்புதம் அறியேனே.

**உரை:**—நெருங்கி மேன்மேல்வரும் இந்த பிறப்பிறப்புக்களை நீக்கும் வழியை எண்ணுமல் அடர்ந்த கூந்தலை உடைய மாதர் செய்யும் பொய்ச் செயல்களையுங் கீழான தன்மைகளையுங் கெண்டைமீன் போன்ற அவர்களது அழகிய கண்களையும் நினைந்தே பயனற்றுக் கிடக்குமியல்புடைய எனக்குக் கடவுளாகிய எமது தலைவன் அளவற்ற பெருமையுடைய தனது திருவடித் தாமரைகளிரண்டையுங் காட்டியருளி உண்மை யறிவினைக் கொடுத்து என்னை யாட்கொண்டருளிய அற்புதச் செயலை இன்னதென்று அறியமாட்டேன்.

**குறிப்பு:**—தான் எடுத்த பிறவியைக் குறித்தலால் இப்பிறப்பு என்றார். கிடப்பேனை=கிடப்பேனுக்கு உருபு மயக்கம். திருவடிகள் கிரியாசக்தியும் ஞானசக்தியுமாதலால் எல்லையில்லாத வென்றார்.

திருச்சிற்றம்பலம்

திருப்பெருந்துறையில் அருளிய

# சென்னிப் பத்து

## சிவ விளைவு

### ஆ சி ரி ய வி ரு த் த ம்

திருச்சிற்றம்பலம்

தேவ தேவன்மெய்ச் சேவகன் தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொ ணுமுத லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணுமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கண்நம் சென்னி மன்னிச்சுடருமே.

**உரை :**—விண்ணவர்க்குத் தலைவன், மெய்யான வீரன், அழகிய திருப்பெருந்துறை மன்னன், மும்மூர்த்திகளாலும் அறியக் கூடாத ஆதியான பேரின்ப வடிவினன், அன்பர் தவிரப் பிற எவராலும் அறிய முடியாத பூவொளி மேனியன், அவரது பரிசுத்தமான பெருமை பொருந்திய தாமரைபோன்ற செய்ய திருவடியின்கண் நமது தலை நிலைபெற்றுப் பொருந்தி விளங்கும்.

**குறிப்பு :**—மும்மூர்த்திகளுள், பிரமனும், அயனும் ஞானம் பெருதவர்கள். உருத்திரன் ஞானம்பெற் றிருப்பினும், அதிகாரமலமுடையர். ஆதலான் மூவரையுங் கூறினர். மலர்ச்சோதி, மென்மையுங் குளிர்ச்சியு முடைய சோதி. ௧

அட்டமூர்த்தி அழகன் இன்னமு தாய ஆனந்த வெள்
ளத்தான், சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன் தென்பெ
ருந்துறைச் சேவகன், மட்டு வார்குழல் மங்கை யாளையோர்
பாகம் வைத்த அழகன்தன், வட்ட மாமலர்ச் சேவ டிக்கண்
நம் சென்னி மன்னி மலருமே.

**உரை :**—எட்டு வடிவங்களையுடைய அழகன், இனிய அமுதமயமான பேரின்பப் பெருக்குடையான், பெரியோன், சிவலோகத்

தலைவனாகிய மெய்ப்பொருள், அழகிய திருப்பெருந்துறையில் வீற்றிருந்த வீரன், தேன்மணங் கமழும் நீண்ட கூந்தலையுடைய உமையைத் தன் திருமேனியில் ஒருபாகத்தே வைத்த வனப்பன். அவனது வட்டவடிவாகிய தாமரை மலர்போன்ற செய்ய பாதங்களின்மாட்டே நமது தலையானது நிலைபெற்று விளங்குவதாக.

**குறிப்பு** :—நிலம், நீர், தீ, கால், வான், ஞாயிறு, திங்கள், உயிர் என்பன இறைவனது அட்டமூர்த்தம். சிட்டன்=ஆசார முடைய பெரியோன். மட்டு=தேன். மலரும்=விளங்கும். உ

நங்கை மீரெனை நோக்குமின் நங்கள் நாதன் அம்பணி கொண்டவன், தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை மேய சேவகன் நாயகன், மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம் உயிருங் கொண்டெம் பணிகொள்வான், பொங்கு மாமலர்ச் சேவ டிக்கண்நம் சென்னி மன்னிப் பொலியுமே.

**உரை** :—பெண்களே, என்னைப் பாருங்கள். நமது தலைவன் கங்கையை அணியாகக் கொண்டவன். தென்னமரச் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் வீற்றிருந்த வீர முதல்வன். பெண்களது கையிலுள்ள வளையல்களையும் எமது உயிரையுங் கவர்ந்துகொண்டு எமது பணிவிடைகளையும் ஏற்றுக்கொள்வானாகிய அவனது விளங்குகின்ற தாமரை மலர்போன்ற செய்ய பாதங்களின் கண்ணே நமது தலைகள் நிலையாகப் பொருந்திச் சிறப்புறுவனவாக.

**குறிப்பு** :—அம்பு, அப்பு என்பதன் மெலித்தல் விகாரம். அப்பு =நீர்; கங்கை. 'நம்பணி'யெனப்பாடமோதி, நமது வேலையை ஏற்றுக் கொண்டவன் என்பாருமுளர். சேவகன்=ஆண்மை யுடையவன். உடம்பு மெலியும்படி உருக்குதலால், வளைகள் கழல்வனவாயின வென்ற கருத்துப்பற்றி, 'வளையுங்கொண்டு' என்றார். உயிர்ப் போதத்தை யொழித்தலால், 'உயிருங்கொண்டு' என்றார். பசுபாசத்தை யறுத்தல் கூறியவாறு. பொங்கு=விளங்கு. ங

பத்தர் சூழப் பராபரன் பாரில் வந்து பார்ப்பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனாகிவந்தில்புகுந்தெமைஆளுங்கொண்டெம்பணிகொள்வான்
வைத்த மாமலர்ச்சேவடிக்கண்நம்சென்னி மன்னி மலருமே.



ஈண்டுச் சமவாயமென்றது தாதான்மிய சம்பந்தத்தை. அஃதாவது பொருளான் ஒன்றேயாயும் ஒருவாற்றாற் பேதமாதற்கு உரிமையுடைமை.

அவன் ஏகாநேகமிரண்டு மின்றிச்
சருவவியாபியாய் நிற்றலான்.

**ஏ**—அதற்குப் பிரமாண மென்னை யென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளை வலியுறுத்துதனுதலிற்று. அம்முதல்வன் ஒன்றே வேறே யென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டற்கும் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலான் இனி ஆணையினீக்கமின்றி நிற்குமன்றேயென மேற்கொண்டது. அவிநாபாவமுணர்த்துவார் ஏகாநேக மிரண்டு மின்றியென மேற்கோளிற் போந்த பொருளை அநுவதித்துச் சருவவியாபியாய் நிற்றலானென ஏதுக் கூறினார். சருவவியாபியாய் நிற்றல் அவையேதானேயா யென்னும் அதிகரணத்தாற் சாதிக்கப்பட்டமையின் அதனை ஈண்டேதுவாக வைத்து ஆணையினீக்கமின்றி நிற்குமென்னு மேற்கோளைச் சாதித்தவாறு.

எங்குமுள னென்றளவை யொன்றன் றிரண்டென்னில்
எங்கு முளன்அன் றெவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லைப் பொன்னொளிபோல் ஈசன்
அவையுடைமை யாளாநாம் அங்கு.

**உ**—ஏதுவும் மேற்கோளுந் தம்முள் அவிநாபாவமாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

எங்கும் உளன் என்ற அளவை ஒன்று அன்று - யாங்கணும் அவையே தானேயென மேற்கூறிய அளவையானே முதல்வன் ஒரு பொருளாதல் கூடாது. ஒன்றாயிற் கங்கைக்கரையில் நின்ற ஒரு மானுடனே காவிரிக்கரையினும் ஒருங்கு நிற்கமாட்டான், அதுபோல ஒருபொருள் ஓரிடத்துளதாதலன்றி யாங்கணும் வியாபித்து நிற்கமாட்டா தென்பதாம்,—இரண்டு என்னில் எங்கும் உளன் அன்று - அற்றேல் முதல்வன் இருபொருளாய் நிற்குமெனக் கோடுமெனின் யாங்கணும் அவையேதானேயா யுளனாதல் கூடாது. தன்மாட்டே

வேற்றுமை யுடையானுக்குப் பிறபொருள்களின்கண் வேற்றுமையின்றி வியாபித்து நிற்றல் சாலாதென்பதாம். அற்றேல் இவ்விரண்டோடு முரணுதலின் எங்கு முளனல்லனெனக் கோடுமெனின்,—எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்று இல்லை - எவ்விடங்களினுள்ள எத்திறப் பொருளுமாகிய அவ்விடத்து அவைகளெல்லாம் அகரவுயிரின்றேல் அக்கரங்க ளில்லையாமாறுபோல அம்முதல்வனை யின்றி யமையாவாகலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்தாது. ஆதலான் எங்குமுளனல்லனென்றல் பொருந்தாதென்பது குறிப்பெச்சம். அற்றேல் வேறு விடுக்குமாறென்னையெனின்,—ஈசன் பொன் ஒளிபோல் - எங்குமுளனாகிய முதல்வன் ஞாயிறும் ஒளியும்போல ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமுஞ் சத்தியுமென்றியைந்து நிற்கும். அற்றேல் பசு பாசங்களும் வியாபகமெனக் கோடலின் அவையும் இம்முறைமை பற்றி ஏகாநேக மிரண்டுமின்றி முதல்வன்போலத் தத்தஞ் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்குமென்பது பெறப்படுதலான் முதல்வனொடு சமமாவான் செல்லுமெனின்,—அவை உடைமை (ஆம்) நாம் ஆள் ஆம் அங்கு - அவ்வாறாயினும் முதல்வனது வியாபகத்தை நோக்கி வியாப்பியமாகலின் அப்பாசங்கள் உடைமையாம்; பசுக்களாகிய நாம், அடிமையாவேம் அம்முதல்வன்மாட்டு.

இவ்வதிகாரணத்தாற் போந்த தொகைப்பொருள், முதல்வன் வியாபகனாதலின் வியாபகப்பொருட்கு ஒன்றாய் நிற்றல்கூடாது; அது கூடாமைபற்றி இரண்டாய் நிற்பனெனின் வியாபகனாதல் கூடாது; வியாபியல்லனெனின் பசு பாசங்கள் அவனை யின்றியமைதல் கூடாது; ஆதலான், முதல்வனொருவனே ஞாயிறுமொளியும் போலச் சிவமுஞ்சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பனெனச் சமவேதமாய் நிற்குமாறு தெளிவிக்கு முகத்தானே தாதான்மியசத்தி யுண்மைக்குப் பிரமாணங் கூறியவாறுமென்றுணர்க. அஃதாமாறு,—தன்னை விளக்குவதூஉம் விடயங்களை விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்று தானே விடயங்களை விளக்குழிக் கதிரெனவுந் தன்னை விளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்றல் போல, புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த் தன்னியல்



பினிற்பதூஉம் புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉமாகிய இரு தன்மையுடைய பேரறிவாய சைதன்னியமொன்றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்குநிலையிற் சத்தியெனவும் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்குமென வுணர்க.

இனித் தீயின் சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில்வேறுபாட்டால்சுடுஞ்சத்தி அடுஞ்சத்தி யென்றற்றொடக்கத்துப் பலவேறுவகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரியவேறுபாட்டால் பரை ஆதி இச்சை ஞானம் கிரியையென்று ஐவகைச்சத்திகளாயும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானிமுதலிய ஐவகைச் சத்திகளாயும், ஆரணி செனனி முதலிய மூவகைச் சத்திகளாயும், நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச் சத்திகளாயும், வாமை சேட்டைமுதலிய அட்டசத்திகளாயும், பரவாகீசுவரி அபரவாகீசுவரி மனோன்மனி மகேசை உமை திருவாணியென எழுவகைச் சிவபேதங்கட்கும் முறையே எழுவகைச் சத்திகளாயும், அத்தியான்மிக மெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பலவேறு வகைப்பட்டும் நிற்கும். அவ்வச்சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப் பெயர்பெற்று நிற்கும். அவ்வச்சத்திகட்கு இடமாய விந்துவும் அங்ஙனம் பலவேறு வகையான விருத்திப்பட்டு அப்பெயர் பெறும். இவற்றினியல்பெல்லாம் ஆகமங்களுட்காண்க.

---

## மூன்றாஞ் சூத்திரம்

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலில் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

சூ—ஆன்மப்பிரகாச முணர்த்துதனுதலிற்று.

சூத்திரக்கருத் துணர்த்துத னுதலிற்று. மேல் அவையேதானே யென்றெடுத்துக் கொள்ளப்பட்ட உயிர் சூனிய முதலியவற்றுள் ஒன்றாகற்பாற்றென அவ்வம் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்து உயிர் அவற்றிற்கு வேறாயுண்டென்பது கருதல்ளவையான் விளக்கி

மேலைச் சூத்திரத்தின் உயிர்கண்மேல் வைத்தோதிய முதல்வன திலக்கணத்தை வலியுறுத்துதல் மூன்றாஞ் சூத்திரத்தின் கருத்து.

முதன்மையுடைமை பற்றி உலகிற்கு நிமித்த காரணமாகிய பதிப்பொரு ளுண்டென்பது முதற்சூத்திரத்துட் கூறி, காரணமாதற் பொதுமையான் இயைபுடைமை நோக்கித் துணைக்காரண முதற் காரணங்களது உண்மையும் அவற்றான் உலகங் காரியப்படுமாறும் இரண்டாஞ் சூத்திரத்துட் கூறி அவற்றானாய பயன் கோடற்குரிய பசுக்கள துண்மைக்குப் பிரமாணம் ஈண்டுக் கூறுகின்றாரென் றுணர்க. இதனானே சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு:—இலதென்றன் முதலிய அறுவகை ஏதுக்களானும் மாயாவியந்திர தனுவென்னும் பெயரடையாற் பெறப்படும் குறிப்பேதுவானும் இவற்றின் வேறாய் இவ்வுடம்பினுள் உயிரெனப்படுவ தொன்றுண்டு. இது பூட்டுவிற் பொருள்கோள்.

தனுவினு ளான்மா வுளதென்றாரேனும், காணப்பட்ட உடம்பாற் காணப்படாத உயிருக்குண்மை கூறவேண்டுதலின் இவ்வுடம்பு சூனியமுதலியவற்றின் வேறாய ஆன்மாவையுடைத்தென உடம்பின்மேல் வைத்தோதுதல் ஆசிரியர் கருத்து. அற்றாகலினன்றே பதியுண்மை உலகின்மேல் வைத்தோதியதூஉ மென்பது. ஈண்டு மேற்கோள் ஒன்றாயினும் எழுவகை மதங்களை வேறு வேறு மறுக்குமேதுக்கள் ஏழாகலான் ஆன்மாவுளதென்னு மேற்கோள் அவற்றொடு தனித்தனி சென்றியைதலின் ஏழதிகரணத்தாயிற்று இச்சூத்திரமென் றுணர்க. இதனுட் கூறிய வேதுவே யேதுவும் மேற்கோளும் ஆகலான் ஏனைச் சூத்திரங்களுட்போல வேறேதுக் கூறவேண்டாமையின், இவை யேதுவாமாறும் இவற்றான் மேற்கோளைச் சாதிக்குமாறும் இனிது விளக்கி வலியுறுத்துதன் மாத்திரையே ஈண்டுரைக்கப்படுவதெனக் கொள்க.

## முதல் அதிகரணம்

ஈண்டு இலதென்றலின் ஆன்மா உளதென்றது.

**மே**—சூனியான்மவாதி, தேகான்மவாதி, இந்திரியான்மவாதி, அந்தக்கரணான்மவாதி, சூக்குமதேகான்மவாதி, பிராணான்மவாதி, விஞ்ஞானான்மவாதி, சமுகான்மவாதி என்னும் எண்மருள் அந்தக்கரணான்மவாதிகள் ஆன்மாவின திலக்கணங் கூறும்வழி, அநுவாதமுகத்தான் மறுக்கப்படுதலின் அவரை யொழித்து, ஒழிந்த எழுவர் மதங்களையும் முறையே மறுத்து உயிருண்மை சாதிப்பான் றொடங்கி, அவற்றுள் இது சூனியமேயான்மாவென மாத்துமிகர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

**எவற்றினையும் அன்றன்றென விட்டு ஆன்மா இலதென்று நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.**

ஆன்மா இலதென்றலே பற்றி அஃதுண்டெனக் கோடல் முயற்கோடில்லை யென்னு மேதுவால் அஃதுண்டெனச் சாதித்தலோ டொக்கும் என்னுங்கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதனுதலிற்று: ஆன்மா இலதென்னுஞ் சூனியான்மவாதிகளும் இல்லையென வாளா கூறுதலமையாமையின் உடல் பொறி விடயமனைத்தினையும் முறையானே இஃதான்மாவன்று இஃதான்மாவன்றென ஒரோவொன்றாகக் கழித்து இவ்வாறாகலின் ஆன்மாவென்பது சூனியமென்று அங்ஙனங் கூறுபவாகலான் அவற்றை ஒரோவொன்றாக விட்டு அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்பதோ ரறிவுண்மையின் அவ்வறிவே மேல் அவையேதானேயா மென்பதனுள் ஆகமவளவையாற் சாதித்துப்போந்த ஆன்மாவென்றவாறாம். ஈண்டிலதென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. அங்ஙனமறியுமறிவுஞ் சூனியமேயெனின், அஃது என்னை ஈன்றாள் மலடியென்பதனோ டொக்குமென்றொழிக வென்பது கருத்து. இன்மை ஈண்டுச் சூனியப் பொருட்டு, சூனியமாவது உள்ளதுமன்று இல்லதுமன்று இரண்டுமாவதுமன்று வேறு மன்றெனப்படும் பாழ்.

அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்
நின்றொன் றுளததுவே நீயனைத்து—நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை நீயல்லை
தற்பரமு மல்லை தனி.

**உ**—அவ்வறிவை உடல் பொறி விடய முதலியவற்றின் வேறாகப் பிரித்துக் காணுமாறும் அதுவே உயிராமாறுந் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துத லுதலிற்று. அனைத்தும் நின்று - உடல் பொறி விடய முதலிய அனைத்தினும் அதுவது தானாக நின்று,—அன்று அன்று என விட்டு - முறையானே இது நானன்று இது நானன்றென ஒரோவொன்றாகக் கண்டு நீக்கியவழி,—அஞ்செழுத்தாய் ஒன்று நின்றுளது - அவ்விடத்து அகரமுதலிய சூக்கும பஞ்சாக்கரரூபமா யறிந்து வந்ததோரறிவு நிலைபெற்றுளதன்றே,—அதுவே நீ - அதுவு நானன்றெனக் கழிப்பின் அங்ஙனங் கழித்த உணர்வு வேறுண்டெனப்பட்டு மேலும் வரம்பின்றி யோடுமாகலிற் சூக்கும பஞ்சாக்கர ரூபமாய் நின்றறிந்து வந்த அவ்வறிவு தானே நீ யென்பதறிவாயாக. அற்றேல், மாயையமுஞ் சிவமுமுளவென்பது மேலைச் சூத்திரங்களாற் சாதிக்கப் பட்டமையின் அவையே அவ்வறிவினையுமறிந்து நீக்குமென வமையுமாகலான் வரம்பின்றியோடு மாறில்லையாலெனின்,—சார்மாயை - நின்னாற் சாரப்பட்ட மாயை,—அனைத்தும் நின்று இன்று தர்ப்பணம் போல் காட்டலான் நீ அல்லை - நிலமுதலிய காரியமனைத்துமாய் நின்னொடு விரவி நின்று இப்பெத்தகாலத்துக் கண்ணுக்குக் கண்ணாடி போல் உனக்கறிவை விளக்கி நிற்றன்மாத்திரையேயன்றி அறிவதன்றாகலான் நீ அம்மாயையல்லை.—தற்பரமும் அல்லை - மாயையான் விளங்கி யறியும் நீ அதற்கு அதீதமாகிய சிவமுமல்லை,—தனி - அவற்றின் வேறு.

விட்டவழியென்பது விட்டெனத் திரிந்து நின்றது. அவ்வறிவாவது இதுவென்றுணர்த்துவார் அன்றன்றென நின்றனைத்தும் விட்ட வழியென எதுப்பொருளை அநுவதித்து அஞ்செழுத்தாயொன்று நின்றுளதென அடையாளங் கூறினார். அஞ்செழுத்தாய் நின்றறியுமாறு வருகின்ற சூத்திரத்துட் பெறப்படும். இதற்குப் பிறரெல்லாங் கூறியது கூறலென்னும் வழுப்பட மேலு மோரியை பின்றி யுரைத்தார். அனைத்து நின்றின்று தர்ப்பணம் போற்காட்டலால் சார்மாயை நீயல்லைதற்பரமுமல்லை தனியென்றதனானே வருகின்ற அதிகரணங்களுக்கெல்லாந் தோற்றுவாய் செய்தவாறுமாயிற்று.



## இரண்டாமதிரணம்

### இனி எனதுடலென்றலின் ஆன்மா உளதென்றது.

**மே**—அவ்வறிவு உடம்பின்கணன்றி நிகழக் காணாமையானும் நானுணுகினேன் பருத்தேனென உடம்பினையே நானென்று வழங்கக் காண்டலானும் உடம்பேயான்மாவெனத் தேகான்மவாதிகள் கூறுங்கடாவையாசங்கித்துச் சூத்திரத்தினிரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடலுதலிற்று.

நான் பருத்தேன் சிறுத்தேன் கரியேன் மனிதன் பார்ப்பானென உடம்பின் குணவிசேடங்களை உபசாரத்தால் உயிருக்கேற்றி வழங்கினும், யானுடம்பு யான்கை யான்கால் என வுடம்பை அவ்வாறு வழங்குவாரின்றி எனதென வேற்றுமைப்படவே யாவரும் வழங்கக் காண்டலின் அதுவே உயிர் வேறுண்டென்பதனை அறிவுறுக்குமென அவன் வழங்குமுறையேபற்றி அவனை மறுத்தவாறு.

### என்பதி என்மனையென்றாற்போல என்கை என்காலென நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாமென்றது.

எனதுடலென்பது பிறிதின் கிழமைப்பொருள்படாது தலைமாத்திரையாய் நிற்குமிராகுவை இராகுவினது தலையென்று வழங்குமாறுபோல அபேதம்பற்றியே வழங்கப்படுமென அமையுமென்னுங் கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துத லுதலிற்று. இராகுவினது தலையென்றாற்போல்வன சிறுபான்மைவழக்கமாகலின் ஆண்டொற்றுமைப்பொருள் கோடலமையும், ஈண்டவ்வாறன்றி என்பதி என்மனைவி என்பொருள் என்று வழங்குமாறுபோல என்கை என்கால் என்கண் என்செவி என்பொறி என்பிராணன் என்னறிவெனப் பலவாற்றானும் பெரும்பாலும் உலகத்து வழங்கக் காண்டலின் இவ்வழக்க மிகுதிப்பாடு பிறிதின் கிழமைப் பொருட்கணன்றி வாராமையான் அங்ஙனங் கூறிக்கொண்டு நிற்கும்பொருள் வேறொன்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே மேலுரையளவைபற்றிச் சாதித்த ஆன்மாவென்றவாறாம். எனதுடலென்றலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது.

எனதென் றமாட்டின் எனதலா தென்னு(து)
உனதலா துன்கைகால் யாக்கை—எனதென்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னிலவை வேறாம் உணர்.

உ—பதி மனைவிமுதலிய பொருள்கள் தம்மின் வேறுதல் கண்டு பிறிதின்கிழமைப்பொருள்பட எனதென்றாற்போலன்றிக் கைகான் முதலியவற்றைத் தற்கிழமைப்பொருள்பட எனதென்று கூறிநிற்ற லின், அவ்விருவேறு மொழியுந் தம்முளொக்குமாறென்னையென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துத னுதலிற்று. எனது அலாது என்னுது எனது என்றமாட்டின் - நீ உலகாயதநூல் கேட்கு முன்னெல்லாம் பதி மனைவிமுதலிய புறப் பொருளையே உயிரெனக் கொண்டு மயங்கிநின்றாயன்றே, அக்காலத்து அவற்றை என தன் றென வேறுகாணாது தனித்தனி எனதென்றே தற்கிழமைப்பொரு ளாகக் கூறிக்கொண்டு நின்றாற்போல,—உனது அலாது உன்கை கால் யாக்கை எனது என்றும் என் அறிவது என்றும் உரைத்து நீ நிற்றிகாண் - உனதன்றாகிய உன் கைகால் யாக்கைகளைத் தனித்தனி எனதென்றும் அங்ஙனமறிந்த பாசவறிவை என்னறிவதென்றுந் தற்கிழமைப்பொருளாகக் கூறிக்கொண்டு நீ யொருபொருள் வேறு நிற்கின்றாய் காண்,—உன்னில் - உலகாயதநூல் ஆராய்ந்த பின்னர்ப் பதி மனைவி முதலிய பொருள்கள் உனக்கு வேறுதல் கண்டாற் போலக் கைகால் முதலியவற்றினியல்புகளையும் ஏதுக்களன் முதலிய வற்றான் ஆராய்ந்து பார்த்தியாயின்,—அவை வேறாம் உணர் அக் கைகால் முதலியன உனக்கு அன்னியமாம் அதனை யறிவாயாக.

## மூன்றாமதிகரணம்

### இனி ஐப்புலனறிதலின் ஆன்மாவுளதென்றது.

மே—ஐம்பொறிகள் ஐம்புலன்களையறியுமென்றல் எல்லார்க்கு மொப்ப முடிந்தமையின் அவை உடல்போற் சடமன்மை பெறப்படு தலானும், அவற்றை எனதென்னும் வழக்கம் பெரும்பான்மையன்றாக லானும், அவையே உயிராதலமையுமென இந்திரியான்மவாதிகள் கூறுங்கடாவையாசங்கித்து மூன்றாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.



ஐம்புலனாகிய சத்தப்பரிசரூபரசகந்தங்களை இந்திரியங் கள் ஒன்றறிந்த தொன்றறியாமையின் இவ்வைந்தினானும் ஐம்பயனுமறிவ துளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

ஐம்புலனறிதலின் ஆன்மா ஐம்பொறியின் வேறெனச் சாதித் தற்கேதுவாமாறு யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து அதன் றாற்பரிய முணர்த்துதனுதலிற்று.

ஒன்றறிந்த தொன்றறியா தாகி உடன்மன்னி
அன்றும் புலனாய்அவ் அஞ்செழுத்தை—ஒன்றறிதல்
உள்ளதே யாகில் அதுநீ தனித்தனிகண்(டு)
உள்ளலவை ஒன்றல்லை ஓர்.

உ—இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறியாதென்ற தொக்கும் ஐந்துமைந்துயிரெனக் கோடலின் அதனானெமக்காவதோரிழுக் கில்லை. இனி இவ்வைந்தையுங் கொண்டு ஐம்புலனையும் ஒரு பொருளே யறியுமெனின் அதற்குப் பிரமாணங் கண்டிலம். குடத் தைக் கண்ட யானே அதனைத் தீண்டினேனென மறித்துணர்வு நிகழ்தல் ஐந்துமோருடம்பின்கண்ணே நிலைபெறு மொற்றுமை பற்றியமையுமெனக் கோடுமென்னுங் கடாவை யாசங்கித்து அதனை வலியுறுத்துதனுதலிற்று.

உடல் மன்னி ஒன்று அறிந்தது ஒன்று அறியாதாகி - உடம் பின்கண்ணே நிலைபெற்று ஒருவிடயத்தை யறிந்த இந்திரியம் மற் றொரு விடயத்தை அறியாதாய்,—அன்றும் புலன் ஆய் அவ்வஞ் செழுத்தை - அங்ஙனந் தம்முண் மாறுபடுஞ் சத்த முதலிய புலன் களைச் சூக்கும பஞ்சாக்கரத்தாற் செலுத்தப்பட்டு ஆராய்ந் தறிகின்ற அவ்வைம் பொறிகளின் றொழிற்பாட்டை,—அறிதல் ஒன்று உள்ள தேயாகில் - கண் உருவத்தை யறிவது செவி ஓசையை யறிவதென்று இவ்வாறுணர்தலையுடையதோர் பொருள் இல்லதோ உள்ளதோ வென வினாயினார்க்கு இல்லதெனின் அவ்வறிவு நிகழாதாதல் வேண்டுமாகலின் உள்ளதேயாமெனின்,—அதுநீ - அவ்வாறுணர்வது யாது அதுவே நீயாகிய வான்மா அவ்வாறுணர்வனவும் அவ்விந்திரி யங்களே யென்றாற் படுமிழுக்கென்னை யெனின்,—அவை தனித் தனி கண்டு உள்ளல் - அவ்விந்திரியங்கள் தத்தம் விடயங்களை வேறு

வேறு கண்டறிதன் மாத்திரையேயன்றி இத்தொழிற்பாட்டையுடையேம் யாமெனவும் அறியமாட்டாவாகலான்,—ஒன்று அல்லை ஓர்-அவ்வைந்தின் றொழிற்பாட்டையு மறிந்து அவற்றின் வரும்பயன் கொள்வதாய நீ யவற்றின் வேறாவை அதனை யாராய்ந்தறிவாயாக.

இம்மூன்றதிகாரணங்களாலுஞ் சாக்கிரத்தில் நிகழுமியல்புபற்றி ஆன்மாவினுண்மை சாதிக்கப்பட்டது.

## நான்காமதிகரணம்

**இனி ஒடுக்கமறிதலின் ஆன்மாவுளதென்றது.**

மே—*"நேசவிந் திரியங் கட்கு நிகழறி விதனாற் காண்டும்" எனநீவிருங் கோடலின் அவ்விந்திரியங்களின் வேறாய் அங்ஙனமறிவது புரியட்டக வுடம்பேயாமெனவமையும், அது புறத்து நிகழாதாயினும் அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்தி யறியுமெனக் கோடுமெனச் சூக்குமதேகான்ம வாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினாலாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. ஐம்பொறிகளுமொடுங்கின சொப்பனத்தானத்தின் நிகழ்ந்தவற்றையறிதலின் ஆன்மா வேறுண்டு.

நனவின்கட் கனவுகண்டாமென்றுங் கண்டிலமென்றும் நிற்பதுளதாகலின் அதுவே யவ்வான்மாவாமென்றது.

சொப்பனத்தில் நிகழ்ந்தவற்றையறிவதுஞ் சூக்குமதேகமேயாகலின் இது சித்தசாதனமாமாலென்னுங்கடாவை யாசங்கித்து அதன் தாற்பரிய முணர்த்துதனுதலிற்று. இஃதென்சொல்லிய வாறோவெனின் ஒடுக்கமறிதலின் என்றது ஒடுக்கத்தில்நிகழ்ந்தவற்றை நனவின்கண் மயங்கியறிதலென்னும் பொருட்டாதலாற் சித்தசாதனமாதல் யாண்டையதென விடுத்தவாறென்பது. கனவுகண்ட சூக்குமவுடம்பே நனவின்கண் அதனையறியுமாயிற் கண்டபடி யறியாது மயங்கி யறிதல் கூடாமையின் உயிர்க்காயின் அதுபோல் ஒருதன்மைத்தாகலின்றி அகத்துச் சேறலும் புறத்துச்சேறலும் வேறுபாடுடைமையான் அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின் அங்ஙனமறியுமுயிர் வேறுண்டென்பது கண்டுகொள்க.

* சிவஞானசித்தியார், இரண்டாஞ்சூத்திரம் ௬௭. ஒசைநற்பரிச.



**அவ்வுடலின் நின்றுயிர்ப்ப ஐம்பொறிகள் தாம்கிடப்பச்**
**செவ்வியின் அவ்வுடலிற் சென்றடங்கி—அவ்வுடலின்**
**வேறொன்று கொண்டு விளையாடி மீண்டதனை**
**மாறல்உடல் நீஅல்லை மற்று.**

உ—கனவின்கட் செல்லுமாறும் ஆண்டு நிகழுமாறும் மீள வருமாறு முணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று. அவ்வுடலின் நின்று உயிர்ப்ப ஐம்பொறிகள் தாம் கிடப்ப - மேல் உயிரன்றெனக் கூறிப்போந்த தூலவுடம்பினின்று உயிர்ப்பனவாய ஐம்பொறிகள் ஆண்டே உயிர்ப்பொழிந்து கிடப்ப,—அடங்கி அவ்வுடலில் செவ்வியின் சென்று - அவை யங்ஙனங் கிடந்தவழிப் புறத்து நிகழுந் தொழிற்பாடெல்லா மடங்கி அவ்வுடம்பினுள்ளால் வருத்தமின்றிச் சென்று,—அவ்வுடலின் வேறு ஒன்று கொண்டு விளையாடி - அத்தூலவுடம்புபோல அதனின் வேறாயதோருடம்பை யெடுத்துக் கொண்டு வேறோராற்றாற் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று விளையாடி,—மீண்டு அதனை மாறல் - மீளவதனை மாறி மேற்சேறலான்,—நீ உடல் அல்லை மற்று - நீ அச்சூக்கும தேகமல்லை அதனின் வேறாவை.

இவ் வதிகாரணத்தாற் சொப்பனத்தில் நிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது.

## ஐந்தாமதிகரணம்

**இனிக் கண்படில் உண்டி வினையின்மையின் ஆன்மாவுளதென்றது.**

மே—சொப்பனத் தானமாத்திரையினன்றித் தொழிற்படாத சூக்கும தேகம்போலன்றிச் சுழுத்தி துரியங்களினுந் தொழிற்படுவதாய பிராணவாயுவே அடங்குதல் விடுதல் செய்தறிவதாகிய ஆன்மாவாதலமையுமெனப் பிராணான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தி னோந்தாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

**ஒடுங்கினவிடத்து இன்பத்துன்பஞ் சீவனம் பிரகிருதிக்கின்மையின் ஒடுங்காதவிடத்து இன்பத்துன்பஞ் சீவியா நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.**

கண்படைகொண்டவழி உண்டிவினையில்லையென்றது உடற்கோ பிராணவாயுவுக்கோவென வினாயினார்க்கு உடம்பு உயிரன்மையான் அதற்கவையில்லாமைபற்றி ஈண்டைக்காவதோரிழுக்கில்லை. இனிப் பிராணவாயுவுக்கெனின் அது துயின்றெழுந்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேனென்றறிதல் பிறிதோராற்றாற் பெறப்படாதென்னும் அருத்தாபத்தியான் ஆண்டும் இன்பநுகர்ச்சி யுண்டென்பது பெற்றாம். விழித்துழிப்போல உறங்குழியும் பிராணவாயு இயங்குதலான் வினையுண்மையுங் கண்டாமாகலின் அதற்கு அவையாண்டில்லையென்றல் மாறுகோள்போலுமென்னுங்கடாவை யாசங்கித்து அதன்றாற்பரிய முணர்த்துதனுதலிற்று.

ஈண்டு உண்டியென்றது விடயங்களிடமாக வரும் இன்பத் துன்ப நுகர்ச்சியை ; வினையென்றது உடம்பு சேட்டித்தலையாகலின். இவ்விரண்டும் பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளெல்லா மொடுங்கிய துயிலிடத்து அஃதியங்காநிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தலின்மையின் அவையொடுங்காத நனவினிடத்து அவ்விரண்டும் அதன்கணிகழ்தலுண்மையின் அவ்வின்மையுண்மைகட் கேது வாகக் கருவிகளை யொடுக்கியும் ஒடுக்காது நிற்பது யாது அதுவே அவ்வான்மாவென்றவாறாம். கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மாவுளதென மேற்கொண்டது.

பிராணவாயுவை யொழித்தொழிந்த கருவிகளென்பது ஆற்றலான் வந்தது. இன்பத்துன்ப நுகர்ச்சியை இன்பத்துன்பமென்றுபசரித்தார். சீவனம் சீவித்தல். சேட்டித்தலென்றதாம். உளதென்றது தனித்தனி சென்றியையும். துயின்றுழியும் விழித்துழியுந் திரிபின்றி ஒருதன்மைத்தாதல்பற்றி உடம்பு பிரகிருதியெனப்பட்டது. இரண்டுகாலத்துமொப்ப வியங்குதல்பற்றிப் பிராணவாயுவைப் பிரகிருதியெனக்கொண்டு அதற்கவையின்மையி னென்றுரைப்பாரும், பிரகிருதிவிகாரமாகிய சித்தத்திற்கு அவையின்மையினெனவுரைத்துச் சுழுத்தியின்கண்ணுந் தொழிற்படுவதாய சித்தமேயுயிரென்னுஞ் சித்தான்மவாதிகளை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமென்றுரைப்பாருமுளர்.

கண்டறியும் இவ்வுடலே காட்டொடுங்கக் காணாதே
உண்டி வினையின்றி உயிர்த்தலால்---கண்டறியும்



உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா துடல்நண்ணில்
உள்ள தாம் உண்டிவினை ஊன்.

உ—துயிலிடத்துக் கருவிகளெல்லா மொடுங்குதலின் இன்பத் துன்பநுகர்ச்சியுஞ் சேட்டையும் பிரகிருதிக்கில்லையாயினவாகலான் அதுபற்றிப் பிராணவாயுவை யான்மாவென்றற் கிழுக்கென்னை யென்னுங் கடாவை யாசங்கித்து அதனைவலியுறுத்துதனுதலிற்று.

கண்டு அறியும் இவ்வுடலே - கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே,—காட்டுக் காணாதே ஒடுங்க - காட்டாய கருவிகள் தொழிற்படாதேயொடுங்கவும்,—உண்டி வினை இன்றி - அவையொடுங்கிய வழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கில்லையாக வும்,—உயிர்த்தலான் - பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான்,— கண்டு அறியும் உள்ளம் வேறு உண்டு - கண்டறியு முரிமையை யுடைய உயிர் பிராணவாயுவின் வேறாயுண்டு,—ஒடுங்காது உடல் நண்ணில் ஊன் உண்டி வினை உள்ளதாம் - அவ்வுயிரொடுங்காது அவ்வுடலின்கணெய்திற்றாயின் அவ்வுடம்பு கருவிகளின் றொழிற்பாட்டானாய உண்டியும் வினையுமுடைத்தாம்,—ஆய் - அதனையாராய்ந் தறிவாயாக.

இது அருத்தாபத்தியளவை. உயிர் வேறுண்டென்றதனை வலியுறுத்துவார் உடம்பாட்டு முகத்தானுமோதினார். இவ்வதிகரணத் தானே சுழுத்தி துரியங்களினிகழு மியல்புபற்றி உயிருண்மை சாதிக் கப்பட்டது. இதுகாறுஞ் சார்மாயை நீயல்லையென்றதனை வலியுறுத் தியவாறு.

## ஆறாமதிகரணம்

### இனி உணர்த்தவுணர்தலின் ஆன்மாவுளது என்றது.

மே—பிரமப்பொருள் மேற்கூறிப்போந்த சடப்பொருள்கள் போலன்றிச் சித்தாகலான் அதுவே உயிராதலமையுமென விஞ் ஞானான்மவாதிகள் கூறுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தினாறாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

தொழிற்படுங்கருவிக ளொன்றுமின்றிக் கேவலமாய் அதீதாவத் தையினின்றுழி அறியுமாறின்றிப் பின்னர்க் கலைமுதலிய கருவி களால் அறிவிக்கவறிந்து வருதலுண்மையின் எக்காலத்துந் திரி

பின்றி யறிந்தாங்கறிந்து நிற்குஞ் சித்தாகிய பிரமத்திற்கு இது தகாமையான் அங்ஙனமுணருமான்மாவேறுண்டு. உணர்த்தவுணர்தலெனவே முன்னுணராது கிடத்தல் பெற்றாம்.

அவனறிந்தாங்கறிவனென் றறிவிக்கவறிந்து உபதேசியாய் நிற்பதுளதாகலின் அதுவேயவ்வான்மாவாமென்றது.

அறிந்தாங்கறிவதாகிய பிரமப்பொருள் அவிச்சைக்காலத்துக் கருவிகளோடுங்கூடியன்றி யறியாதெனக் கோடுமாகலின் அதுபற்றி உயிர் வேறுண்டென்றல் பொருந்தாதென்னுங்கடாவை யாசங்கித்து 'அவ்வளவினவன்மகிழுக' வென்னுநியாயத்தால் வேறு மதன்றாற்பரிய முணர்த்துதனுதலிற்று. கருவிகளோடு கூடியவழியுந் தன்னியல்புணருமாறில்லாத ஆன்மாவைப்போல அம்முதல்வன் மறந்து மறந்தறிதலின்றி அறிந்தவாறே யறிந்து நிற்கும் பேரறிவுடையனென வேதாகமங்களானறிவிக்கவறிந்து குரவனறிவுறுக்கு முபதேசமொழியைப் பெற்றுடையதாய் நிற்பதொன்றுளதாகலின் அதுவே மேலுரையளவையாற் சாதித்துப்போந்த ஆன்மா வென்றவாறாம். உணர்த்தவுணர்தலின் ஆன்மாவுளதென மேற்கொண்டது. அறிந்தாங்கென்பது அப்பொருட்டாதல் *"எண்ணிய வெண்ணியாங் கெய்துப" என்பதனானுமறிக. இதற்குப் பிறவாறுமுரைப்ப. அவையெல்லாம் பொருந்தாமை யோர்ந்துணர்க.

அறிந்தும் அறிவதே ஆயும் அறியா(து)
அறிந்ததையும் விட்டங் கடங்கி—அறிந்த(து)
எதுஅறிவும் அன்றாகும் மெய்கண்டான் ஒன்றின்
அதுவதுதான் என்னும் அகம்.

உ—கருவிகளோடு கூடியவழியும் அவிச்சை நீங்காமையின் விடயங்கண் மாத்திரையே யறியுமன்றித் தன்னியல்பறியுமாறில்லை அஃதுபதேசத்தா லறியற்பாலதேயாமாகலான் அதுபற்றி இழுக்கென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து அதனையும் மேற்கூறிய நியாயத்தானுடம்பட்டு இன்னுமொருதாற்பரிய முரைக்கு முகத்தானே விடயங்களை யறிவுழியும் படும் வேறுபாடு கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று. அவனறிந்தாங் கறியுமாறும் உயிர் மறந்து

* திருக்குறள், வினைத்திட்பம். ௬.



மறந்தறியுமாறும் தெரித்துணர்த்தி வலியுறுத்துதனுதலிற்று எனினுமமையும்.

அறிந்தும் அறிவதே ஆயும் அறியாது - கருவிகளெல்லாவற்றோடுங் கூடிச் சாக்கிரத்தானத்தினின்று விடயங்களையறியுமிடத்தும் ஒருங்கேயறியமாட்டாது ஒன்றனையேயறிந்தும் ஒன்றனையறியப்புகுவதாயும் முன்னறிந்த தொன்றனை அறியாதொழிந்தும்,—அறிந்ததையும் விட்டு அங்கு அடங்கி - இங்ஙனமோரோவொன்றாக அறியப்பட்ட விடயத்தையும் இடையீடின்றி அறியமாட்டாது விட்டு விட்டாங்கே ஐந்தவத்தைப் பட்டடங்கி,—அறிந்தது எது - மீளவறிந்து வருதல் கண்கூடாகக் காணப்படுதலான் அங்ஙனமறிந்து வந்த பொருள் யாது அது சடமன்றென்பது மேற்காட்டப்பட்டது முன்னருங் காட்டப்படும்,—அறிவும் அன்று - ஒன்றாக இயல்பாகவுணர்தலே பேரறிவாகலின் அதுவுமன்றாம்.—மெய்கண்டான் ஒன்றின் - இனி மெய்யாகிய சித்தாந்தநெறியினை யுணர்ந்தோன் வேறென்னையோவென மனமொருங்கியாராயுமாயின்,—அது அது தான் என்னும் அகம் ஆகும்-காட்டுமொளிக்கு வேறாய கண்ணொளி போல அவ்வறிவிற்கு வேறாய் அதுவதுவே தானெனச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றறியு மியல்பையுடைய உயிராம்.

அங்கு உணர்த்துமுறைமைத் தானமாகிய இலாடத்தினென்றவாறு. அறிந்ததையும் விட்டங்கடங்கி யறியுமாறு வருகின்ற சூத்திரத் திறுதியினும், அதுவதுதானெனச் சார்ந்ததன் வண்ணமாமாறு உண்மையதிகாரத்தும் பெறப்படும். அறிந்து மறிவதேயாயு மறியாதறிந்ததையும் விட்டங்கடங்கி யறிந்ததெது என்பதற்கு ஓதியதனை ஓதியபொழுதே யுணர்ந்தும் பலகாலோதி யுணர்வதாயும் பலகாலோதியு முணர்தலின்றியும் உணர்ந்ததனையும் பின்னர் மறந்தொழிந்தும் இவ்வாறோதி யுணர்ந்ததியாதென் றுரைத்தலு மொன்று. இப்பொருட்கு அடங்கி யென்புழியும் எண்ணும்மை விரித்துரைக்க. இங்ஙனம் மூவகைப்படுத் துரைப்பவே, உணர்த்த வுணர்தலென்னுமேதுவான் முறையே அதீதத்தின்கணிகழு மியல்புபற்றியும் சுத்தத்தின்கண் நிகழு மியல்புபற்றியும் உணர்த்தும் முறைமைக்கண் நிகழு மியல்புபற்றியும் உயிருண்மை சாதிக்கப்பட்டது. இது தற்பரமுமல்லையென்றதனை வலியுறுத்தியவாறு காண்க. விஞ்ஞானமே ஆன்மா

வென்னும் புத்தரின் யோகாசாரன் மதத்தை மறுத்தற்கெழுந்தது இவ்வதிகரணமெனக்கொண்டு அதற்கியைய வுரைப்பாருமுளர்.

## ஏழாமதிகரணம்

இனி மாயாவியந்திர தனுவினுள் ஆன்மாவுளதென்றது.

மே—உடம்பு முதலியவற்றுள் ஒரோவொன்றே ஆன்மாவாதலின்றென்றதொக்கும், அவற்றுள் ஒன்று குறைந்தவழியும் அறிவு நிகழாமையானும் எல்லாங் கூடியவழி அது நிகழ்தலானும் அனைத்துங் கூடிய சமுதாயமே உயிராதலமையுமெனச் சமுகான்மவாதிகளாகிய சௌத்திராந்திகர் வைபாடிகர் கூறுங்காலவை யாசங்கித்துச் சூத்திரத்தி னிறுதிக்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. மாயாகாரியங்களான் யாக்கப்பட்டியன்ற சூத்திரப்பாவை போலுமுடம்பின்கண்ணே அவற்றிற்றிற்கு வேறாய் ஆன்மாவுண்டு. எனவே அவையெல்லாம் மாயையின் காரியங்களாய் நிலைபெறுதனவாகலின் நிலைபெறுடைய உயிராகா வென்றவாறாயிற்று.

அவைதாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்றலான்.

ஏ—சித்தமுஞ் சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயமைந்தும் மாயாகாரியமென்பது எம்மனோர்க்கு உடம்பாடன்மையின் அதுபற்றி ஆன்மா வேறுண்டெனச் சாதித்தலமையுமாறென்னையென்னுங்காலவை யாசங்கித்து 'அவ்வளவி னவன்மகிழுக' வென்னு நியாயம்பற்றி வேறுமோராற்றாற் சாதித்தனுதலிற்று.

நீ ஐந்துகந்தமெனக்கொண்ட மாயாகாரியங்கள் ஆன்மாவெனப் பெயர்பெறுமாறின்றி வேறுவேறு பெயர்பெற்று நிற்பனவாகலான் மாயாவியந்திரதனுவினுள் ஆன்மாவுளதென மேற்கொண்டது.

கலையாதி மண்ணந்தம் காணில்அவை மாயை
நிலையாவாந் தீபமே போல—அலையாமல்
ஞானத்தை முன்னுணர்ந்து நாடில் அதுதனுவாம்
தான்அத்தின் வேறாகுந் தான்.

உ—அவை தனித்தனி வெவ்வேறு பெயர்பெறினுந் தொக்க சமுதாயத்தின்கண் ஆன்மாவெனப் பெயர்பெறுமெனக் கோடுமாக

**Supplement to this Issue :—**

உ

சிவமயம்.

ஸ்ரீ ஞானசம்பந்த குருப்யோ நம:

# பெரியபுராணம் மூலமும்,

## சித்தாந்தபோத ரத்னாகரமெனப் பெயரிய பொழிப்புரை, விசேடவுரை, கருத்துரையும்.

சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம் என்னும் இம்மூன்றும் முதனூல், வழிநூல், சார்புநூலென இருத்தல்போல் அந்நூல்களின் முடிபொருளாய்ப் பயனியலாயிருக்கும் பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளை அநுபவமாக உணர்த்துவது- திருத்தொண்டத் தொகையையும் திருத்தொண்டர் அந்தாதியையும் தொகை வகையாகக் கொண்டு விளங்கும் விரிநூலாகிய பெரியபுராணமே.

இப்புராணத்திற்கு காஞ்சி-ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் திருவிருத்தங்களிலுள்ள பதங்களை விடாமல் பொழிப்புரையாகவும் அப்பதங்களில் ஆழ்ந்துள்ள பொருள்களை விடாமல் விசேடவுரையாகவும் அப்பொருளில் உட்கிடையாய் விளங்கும் நுண்ணிய பொருள்களை கருத்துரையாகவும் செய்துள்ளார்.

அன்றியும் விரிநூலாகிய இப்புராணத்திற்கு முதனூல் திருத்தொண்டத்தொகையாகலான் அத்தொகையில் அடியார்களைத் தனித்தனியாகவும், தொகையாகவும் ஓதியருளத் தொடங்கிய ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் ஒவ்வொருவருக்கும் அடியேனென்றும் அடியார்க்கடியேனென்றும் ஓதியதற்குக் காரணங்களையும், வகைநூல் திருத்தொண்டர்

அந்தாதியாகலான் அவ்வந்தாதியில் வகுத்திருக்கும் ஒவ்வோர் பதங்களைக்கொண்டே ஸ்ரீ சேக்கிழார் விரித்துரைத்தருளியிருக்கும் சீர்மையினையும், தொகை வகை விரியாகவும் முதனூல், வழிநூல், சார்புநூலாகவும் உள்ள இம்மூன்றினும் கூறிப்போந்தவற்றை சித்தாந்தாசாரியராகிய ஸ்ரீ உமாபதிசிவம் புராணசாரம் என அருளியுள்ளாராகலின் அச் சாரத்தின்கீழ் அப்புராணத்தின் சாரங்களையும் காட்டி இருக்கின்றார்.

ஆசிரியர் சேக்கிழார் கூறியருளிய பதங்களின் சாரங்களையும் அவற்றிலுள்ள மெய்ப்பொருளின் சாரங்களையும் தொண்டின் சாரங்களையும் அவற்றில் விளங்கும் மெய்ஞ்ஞான சாரங்களையும் அம்மெய்ஞ்ஞானங்களின் வழியே அங்குரித்துத் தோன்றி வளர்ந்து இலை, பூ, காய், கனியாகக்கிடக்கும் அன்பின் சாரங்களையும் விளக்கியுள்ள இச்சித்தாந்தபோத ரத்நாகர வுரை 1000 பாடல் (3 சருக்கம்) ராயல் பாரம் நூறு முன்னரே வெளியாயிருக்கின்றது. விலை ரூபா 6—8—0. நான்காவது சருக்கம் 1934ஞு மார்ச்சுமீ தொடங்கி 5 பாரங்கொண்ட சஞ்சிகை ரூபமாக வெளிப்படுத்தி வருகின்றேம். விலை அணா 0—4—0 வருடச் சந்தா (உள்ளூர்) 2—8—0 வெளியூர் 3—0—0

இச்சித்தாந்தவுரை அவசியம் அச்சிட்டு வெளிவரக் கண்டு மகிழவேண்டுமென்பது சித்தாந்த சைவர் பலரும் விரும்புவ தொன்றாம். [illegible]யம்.

இங்ஙனம்,

ஆர். ஏகாம்பரம் பிள்ளை,

19, ரண்டால்ஸ் சாலை,

வேப்பேரி, சென்னை.

187099

C[illegible] Press, Madras.

## சமாஜம் நடத்தப்போகிற சைவத் தேர்வுகள்

இவைகட்கு விண்ணப்பத்தாள் 20-8-34-க்குள் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. சில ஆசிரியர்கள் பல மாணவர்களை அத் தேர்வுகட்குத் தயாரிப்பதாகவும், விண்ணப்பத்தாளனுப்பும் கடைசி தேதி 20-9-34 என இருத்தல் நலமென்றும் தெரிவித்தார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க அத் தேதி 20-9-34 என்று மாற்றப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும்நாள் ஞாயிற்றுக் கிழமை (18-11-34) என்று குறிக்கப்பட்டுள்ளது. தேர்வுக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் உடனே சமாஜக் காரியதரிசிக்கு ¾ அணா ஸ்டாம்பு வைத்து எழுதுக.

---

## மதிப்புரை

காதம்பரி:—மொழிபெயர்ப்பாசிரியர் - பிரமஸ்ரீ சேட்லூர் இராம்மாராஜபுரம் சேஷாச்சாரியார் அவர்கள். விலை அணா 12. பக்கம் 100. [கிடைக்குமிடம்:—The Original Vel Printing works 1/10 A. Stringer's Street G. T. Madras.] இந்நூல் நமது பார்வைக்கு வந்தது. காதம்பரி என்ற வடமொழி நாடகம் மிகச்சுவையுள்ளது. அதை நல்ல முறையில் இவ்வாசிரியர் மொழிபெயர்த்துள்ளார். ஆங்காங்கு திருக்குறளில் பல பாக்கள் நாடக பாத்திரங்கள் வாக்கில் அமைத்துள்ளது நோக்கத்தக்கது. வடமொழியிலுள்ள சீரிய பகுதிகளையெல்லாம் இம்மொழிபெயர்ப்பு தமிழில் அளிப்பது இதன் தனிச்சிறப்பாகும். இத்தகைய பல மொழிபெயர்ப்புக்கள் தமிழில் வந்தால், இருமொழிகளிலும் உள்ள சிறந்த பொருள்களை ஒப்பிட்டு அனுபவிக்கத் தமிழ் மக்கட்கு வசதி ஏற்படும். தமிழறிஞர்கள் இந்நூலை வாங்குதல் அவசியம்.

---

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!

# அப்பர் நாடகம்

இந்நாடகம் நான்கு அங்கங்களையும் பன்னிரண்டு காட்சிகளையும் உடையது. மாணவர் கழகங்களும் சைவசபைகளும் நடிப்பதற்கென்றே திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்களால் எழுதப்பெற்றது. இந்நாடகத்தைப் படித்தவுடன் பெரியபுராணத்தைப் படிக்கவேண்டும் என்ற ஆவல் இயல்பாகத் தோன்றும்.

தனிப்பிரதி விலை அணா 2. தபாற்கூலி அணா 1.

பத்து பிரதிகள் விலை ரூ 1. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 8.

உடனே சைவசித்தாந்த மகாசமாஜத்துக்கெழுதி பிரதிகளைப் பெறுக.